

# தென்மொழி



## உள்ளே...


இந்துவியம் தழைக்கத் துணைபோகும் தலைவர்கள் வீழ்த்தப்பட வேண்டும்!

சாலையார் இன்றில்லை! வேலையார் ஏந்துவார்?

தமிழகக் கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறையே வேண்டும்.

சமற்கிருத ஆளுமைக்கெதிராக ஒலிமுழக்கப் போராட்டம்.

உலகின் கதை!

சாலையார் நினைவேந்தல் நிகழ்ச்சி!

ஆவணத் தமிழ்

எங்கள் ஒருவரை என்று காண்போம்?


## அலைகடலுக்கு அப்பால் எந்தமிழர் வீரம்!

நிலைகுலைந்து போயினர்காண் மாற்றார்கள்
சிங்களத்துப் படைவீரர்கள்
மலையளவு படைக்கலங்கள் வைத்திருந்தும்
மளமளென அவற்றைவிட்டுத்
தலைதெறிக்க ஓடுகின்றார் உயிர்தப்பிப்
பிழைத்தாலும் போதுமென்றே
அலைகடலுக் கப்பாலில் எந்தமிழர்
நிகழ்த்துகின்ற வீரம் என்னே!

— இறை


சுவடி - 30
ஓலை - 11
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 நளி (நவம்பர் - 1998)



# அரசும் மதமும்

ஒரு குடியரசு நாட்டில், அதுவும் குறிப்பாக இந்நாட்டில், மதங்களுக்கு வழங்கப்பெறும் உரிமைகள், சலுகைகள் இப்படி அளவுக்கு மீறின வகையில் இருப்பது, மக்களுக்கு அரசு விளைவிக்கும் பிறவகை நலன்களுக்கு ஓர் இடையூறாகவே இருக்கிறது.

மதம் ஒரு கொள்கை அல்லது ஒரு கடைப்பிடியாக இருக்கலாம். ஆனால் அது சட்டமாக்கப்பட்டு விடக்கூடாது. அரசு ஆளுமைகளில் அது குறுக்கிடவே கூடாது. இதனால்தான் உருசியா போலும் பொதுவுடைமை நாடுகளில் மதங்களுக்கு இடம் கொடுத் தாலும் அரசாளுமையில் அவற்றைத் தலையிடா வண்ணம் தடைப்படுத்தியுள்ளனர். அதனால்தான் அவர்களால் பல நல்ல விளைவுகளைச் செய்ய முடிகின்றது.

ஆனால், அவ்வாறு இவ்விந்திய நாட்டின் சட்டம் அமையாமைக்குக் கரணியம், இதனை உருவாக்கிய எழுவரில் ஐவர் பார்ப்பனர். எனவே, தங்கள் வாழ்க்கையின் எல்லாக் கூறுபாடுகளுக்கும் மதமே துணையாக இருக்கின்ற அந்தத் தன்மையினை அவர்கள் சட்டத்தினின்று விலக்கி விட முடியாமற் போனதுடன், அந்தச் சட்ட அமைப்புகளாலேயே அம்மதக் கோட்பாடுகளைக் காப்பாற்றவும் செய்து விட்டனர். ஆகவே தான் இந்த நாட்டில் மதத்தின் பெயரால் ஒருவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எப்படி வேண்டு மானாலும் பிழைக்கலாம். அந்த அளவுக்கு இந்த நாட்டின் சட்டம் இங்குள்ள மதங்களுக்கு — குறிப்பாக இந்து மதத்திற்குக் காவலாக்கப்பட்டுள்ளது.

எனவேதான் எத்தனைப் பொதுவுடைமை சமவுடைமைக் கொள்கைகள் — முழக்கங்கள் வந்தாலும் இங்குள்ள தீமைகளை ஓர் இம்மியளவும் பெயர்த்துக் காட்ட முடியவில்லை. இந்தியச் சட்ட அமைப்பையே உடைத்துத் தூள் தூளாக்கும் கொள்கையை எந்தக் கட்சி கொண்டுள்ளதோ அதுதான் இந்த வகையில் ஓரளவு உண்மையான — நம்பிக்கையுடைய கட்சியாக இருக்க முடியும்.

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(தென்மொழி, சுவடி : 12, ஓலை : 1, 1974)



“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)


நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்





தென்மொழி

மொழி—இனம்—நாடு


**நம்முடிக்கு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுடிக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30 தி.பி. ௨0௨௯ - நளி (நவம்பர்–'98) ஓலை.11


# இந்துவியம் தழைக்கத் துணைபோகும் தலைவர்கள் வீழ்த்தப்பட வேண்டும்!

இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பாரதீய சனதாக் கட்சி அரசு, தான் பதவியேற்றது முதலே எந்த நேரத்திலுங் கவிழ்ந்து விடக் கூடிய அவல நிலையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் நலப் பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவதற்கு மாறாகத் தனது இந்துவியம்(இந்துத்துவா) என்னும் மதவெறிக் கொள்கையை நிலைப்படுத்துவதற்கு வலுவான அடித்தளம் அமைப்பதில் மிகவும் வலக்காரமாகச் செயற்பட்டு வருகிறது.

இந்தியாவை இந்துவிய நாடாக ஆக்குவதற்கு ஏற்ப வரலாற்றைத் திரித்தெழுதுவது, கல்விக் கொள்கையை — பாடத் திட்டங்களை மாற்றுவது, புதிய கலைக்களஞ்சியங்களைத் தொகுப்பது முதலான பணிகள் மிகவும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

‘மதச்சார்பற்ற நிலைக்கு மாறாக இப்படி இந்துவியமாக்குவது அரசியலமைப்புக்கு மாறுபட்டதாகாதா’ என்றால், ‘இந்துவியம் என்பது மதக்கொள்கை யன்று; அது ஒரு வாழ்க்கை முறை’ என்று விளக்கமளிக்கிறார் தலைமையமைச்சர் வாச்சுப்பேய். அப்படியானால் இந்துவியம் என்பது இந்தியாவிலுள்ள எந்த மக்களுக்கான வாழ்க்கை முறை என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை.

இந்திய மக்கள் அனைவருக்குமான வாழ்க்கை முறை என்று எதனையும் கூறமுடியாது. பனிமலைப் பைதிரத்தவர்(இமாசலப் பிரதேசத்தவர்) வாழ்க்கை முறையும் இராசத்தானியர் வாழ்க்கை முறையும் வெவ்வேறானவை யல்லவா? வங்காளத்தவர் வாழ்க்கை முறையும் மலையாளிகளின் வாழ்க்கை முறையும் ஒன்றாகிவிடுமா? பஞ்சாபியர் பழக்கவழக்கங்களுக்கும் தெலுங்கு நாட்டவர் பழக்கவழக்கங்களுக்கும் வேறுபாடு இல்லையா?

இன்னொரு வகையில் பார்க்கப் புகுந்தால் பல்வேறு சமயத் தவர்களும் பெருக வாழும் இந்தியாவில் அவ்வவர் சமயச் சார்பி லான வாழ்க்கை முறைகளும் வேறுபட்டனவாக இருத்தலே இயல்பு. இந்துவியம் என்பது சமண(சைன), சீக்கிய, கிறித்துவ, இசுலாமிய மக்கள் அனைவரையுந் தழுவிய வாழ்க்கை முறையாக முடியுமா?

இவற்றை யெல்லாங் கூர்ந்து பார்த்தால் இந்தியா என்பது இந்து மதத்தவர்க்கே உரியது; ஏனைய மதத்தவர்களோ வெவ்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களோ தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளவோ கடைப்பிடிக்கவோ உரிமையில்லை என்பதே இந்துவியத்தின் உள்ளீடு என்பது புலனாகும். இதைத்தான் வாச்சுப்பேய் சொல்லாமல் சொல்கிறார்.

அரசியல் கட்சி என்னும் நிலையில் பாரதீய சனதாக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், அதன் உடன் சுற்றமான (சங்பரிவார்) — இராட்டிரீய சேவா சங்கம்(ஆர்.எசு.எசு), விசுவ இந்து பரிசத்து, இந்து மகாசபை, வித்தியாபாரத்து முதலான எண்பதுக்கு மேற்பட்ட இயக்கங்களே பெரும்பாலும் ஆட்சி நடவடிக்கைகளைப் பின்னிருந்து இயக்கி வருகின்றன. இவற்றுள் பல, காந்தியடிகள் கொலை, பாபர் மண்டப இடிப்பு முதலான பெருங்குற்றங்களுக்காகத் தடைசெய்யப்பட்டவை; தடை நீக்கப்பட்டு இயங்குபவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய வரலாற்றாராய்ச்சிக் குழு கடந்த நான்கு மாதங்கட்கு முன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்துவியப் பரப்புதலுக்கு ஏற்ப வரலாற்றைத் திருத்தி எழுதுதற்காக மேற்கூறிய உடன் சுற்ற இயக்கங்களைச் சார்ந்தவர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். பாபர் மண்டபம் இருந்த இடத்திற்றான் பன்னூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் இராமர் பிறந்தார் என்று 'கண்டுபிடித்து'க் கூறியவர்களில் பலர் இவ்வரலாற்றுக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அடுத்து, இந்துமதக் களஞ்சியம் உருவாக்கும் பணி அமெரிக்கா வில் நடைபெறுகிறது. இவ் விந்துமதக் களஞ்சியம், பதினெட்டுத் தொகுதிகளைக் கொண்டதாக இருக்கும் என்றும் இதற்கான

பணியில் அறிஞர்கள் ஈராயிரம் பேர் ஈடுபட்டிருப்பதாகவும் இன்னும் ஈராண்டுகளில் கரோலினா பல்கலைக் கழகம் இதனை வெளியிட விருப்பதாகவும் இக்களஞ்சிய வெளியீடு தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி கடந்த இருமாதங்களுக்கு முன் நியூயார்க்கில் நடைபெற்றதாகவும் அதில் தலைமையமைச்சர் வாச்சுப்பேய் கலந்துகொண்டார் என்றும் நியூயார்க்கிலிருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்துமதக் களஞ்சியம் தொகுக்கும் ஈராயிரவரும் எத்தகையவர்க ளாக இருப்பார்கள் என்பதும் பணி எத்தகையதாக இருக்கும் என்ப தும் மேற்கூறிய வரலாற்றாராய்ச்சிக் குழுவை நோக்கினாலே விளங்கும்.

இவை ஒருபுறமிருக்க, இந்துவியத்துக்குப் பாரதீய சனதாக் கட்சியும் அதன் உடன் சுற்ற இயக்கங்களும் பெரிதும் முன்னிறுத் துவது சமற்கிருதத்தையே. சமற்கிருதம் என்றால் வேதங்கள் முதலாயினவும் அதனுள் அடக்கம்.

சமற்கிருதம் இந்தியாவின் பண்பாட்டு மொழி என்று கூறப் படுகின்றது. பண்பாடு என்பது மக்களைச் சார்ந்ததே யன்றி மொழி யைச் சார்ந்ததன்று. ஒரு மொழியைப் பேசும் மக்களின் பண்பாடே அம்மொழியின் பண்பாடாகச் சார்த்தி வழங்கப்படுகின்றது.

சமற்கிருதமாவது வேதமொழி, பிராகிருதம், தமிழ் முதலான மொழிகளைக் கூட்டிச் செய்யப்பட்ட செயற்கை மொழியே. ஆதலால் அஃது எந்த இனமக்களுக்கும் தாய்மொழியன்று. எந்த இனத்தவரும் சமற்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டதில்லை. பார்ப்பனர்கள் அம்மொழியைத் தம் தாய்மொழிபோற் கொள்வது, தம்மை மற்றைய வரினும் மேம்பட்டவர்களாக உயர்த்திக் காட்டிக் கொள்ளும் வலக் காரம் பற்றியதே. படிக்கவும் எழுதவும் மனப்பாடம் பண்ணிக் கொள்ளவுமான ஏட்டுமொழியே யன்றி, எவ்விடத்திலேனும் மக்களிடையே வழங்கும் நாட்டு மொழியுமன்று; வீட்டகத்தே மக்களொடும் மற்றையவர்களொடும் யாரும் பேசிப் புழங்கும் வீட்டு மொழியுமன்று. அதனைச் செத்த மொழி என்று கூறுவது உயிரற்ற மொழி என்பது பற்றியே. மற்று எக்காலத்திலும் அஃது உயிரோட்டமாக வழங்கியதுமில்லை; வழக்கிழந்து செத்தது மில்லை. அது பாவை போன்றதே என்பது மொழிநூல் மூதறிஞர் கருத்து.

ஆகவே, சமற்கிருதம் இந்தியாவின் பண்பாட்டு மொழி என்பது வெளிற்றுரையே என்பது வெளிப்படை.

அண்மையில் நடைபெற்ற இந்தியக் கல்வியமைச்சர் மாநாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் இந்துவியம் — சமற்கிருதம் பற்றியனவே. இன்னும் ஏழாண்டுக் காலத்திற்குள் இந்தியாவில் கல்வியறிவில்லா

தவர்களே எவருமில்லை என்னும் உயரிய கொள்கையை முன் வைத்து அதுபற்றிய திட்டங்களை ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட கல்வியமைச்சர்கள் மாநாட்டில், பலர் எடுத்துக் கூறியும் கேளாமலும், தாமே ஒப்புக் கொண்டதையும் மீறியும் கலைமகள் வணக்கம் (சரசுவதி வந்தனம்) பாடப்பட்டது பெரும்புயலைக் கிளப்பியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் தனியார் பள்ளிகளில் மட்டுமன்றி அரசுக் கல்விக் கூடங்களிலுங்கூடக் கலை மகள் வணக்கப்பாடல் பாடப்பட்டது உண்டு. காலாண்டு விடுமுறையே கூடத் தொண்டிரவு(நவராத்திரி) விடுமுறை எனப்பட்டதே. (அரை யாண்டு விடுமுறை என்பது கிறித்துமசு விடுமுறை எனப்பட்டதே யாகும்.) இந்துமதத்தவர்கள் அல்லாத பிற மதத்தவர்கள், கலை மகள் வழிபாட்டை ஏற்காவிடினும் கல்வியொடு தொடர்புடையது; இறைவழிபாடு என்பதாற் போலும் அதற்குப் பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவித்ததில்லை. சீர்திருத்த மனப்பான்மையும் நடுநிலைப்போக்குமுடைய அறிஞர்கள் சிலர் சுட்டிக்காட்டியதன் அடிப்படையில் அரசுத் திட்டப்படி கலைமகள் வணக்கம் தவிர்க்கப் பட்டு அவ்விடத்தில் தமிழ்வாழ்த்துப் பாடுவது முன்வைக்கப்பட்டது, வழக்கமாகிவிட்டது. அவ்வாறே திருவள்ளுவர் படத்தை அரசு அறிமுகப்படுத்திச் சமயப்படங்களைத் தவிர்க்கச் செய்தது.

இன்றுங்கூடக் கலைமகள் விழாவுக்கு அரசு விடுமுறை அளிக்கிறது. அரசு அலுவலகங்களிலேயேகூட அதிகாரிகளின் இசை வோடு கலைமகள் வழிபாடும் பிறவும் தடபுடலாக நடைபெறுகின்றன. இவற்றை யெல்லாம் நல்லறிஞர்கள் நடுநிலையுணர்வோடு அவ்வப் போது அக்கறையுணர்வோடு சுட்டிக்காட்டிக் கண்டித்து வருகிறார்கள். அவ்வப்போது சிறுமாற்றங்கள் நேர்வதும் பிறகு மீண்டும் பழைய நிலை தலையெடுப்பதும் கண்டுங் காணாமல் இருப்பதும் வாடிக்கை.

கண்டனத்துக்குரியவேனும், இவையெல்லாம் வேறு. ஆனால், கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் உள்நோக்கத்தோடும் விடாப் பிடியாகவும் பாடப்பட்ட கலைமகள் வணக்கம் வேறு.

ஏதோ ஒரு வழக்கம், வருவாய் கொண்டாட்டம் என்னும் அடிப்படையில் இக் கலைமகள் வணக்கம் பாடப்படவில்லை. கடவுள் நம்பிக்கை பெரிதுமுடைய நடுவண் பைதிர(மத்தியப் பிரதேச) முதல்வர் திக்குவிசயசிங்கேகூடக் கண்டித்து வெளி நடப்புச் செய்யுமளவுக்கு இ'து இந்துத்துவா அழுத்தங்கொண்டதும் அடாவடித்தனமானது மாகும். இந்துவியப் பரப்பலான சூழ்ச்சி நோக்கத்துடன் பாடப்பட்டது. இது சரியென்று மாந்தவள மேம்பாட்டு மந்திரி முரளி மனோகர் சோசி இன்னமும் சப்பைக் கட்டுக் கட்டுவது அறிவுடையோர் நாணத்தக்கது.

இக் கலைமகள் வணக்கம் தமிழ்த்தாய் வணக்கம் பாடுவது போன்றதுதான் என்று குரலெழுப்புகிறார் தமிழ்நாட்டவர் ஒருவர். மொழி என்பது மாந்தனின் இயற்கையுணர்வு. கல்வியறிவு பெற்றவர்களுக்கு மட்டுமன்று; கல்லாதவர்களுக்குங்கூட மொழி பொதுவானது. மொழியை வாழ்த்துவதையும் இந்துமதத்தவரைத் தவிர ஏனையவர்கள் ஏலாத கலைமகள் வணக்கத்தையும் சமமாக வைத்துப் பேசுவது அவரது அறியாமையாகாது; அரம்பத்தனமே.

இனி, பாரதீய சனதாக் கட்சியின் உடன்சுற்றத்துள் ஒன்றான வித்தியா பாரத்தால் வகுத்துக் கொடுக்கப்பட்டுக் கல்வியமைச்சர்கள் மாநாட்டில், நாட்டு மக்களின் கல்வியறிவு மேம்பாட்டுக்காக முன் வைக்கப்பட்டன: பாடத்திட்டங்களை இந்திய(இந்துவிய) மயமாகவும் இந்தியத் தேசிய மயமாகவும் இறையியல் மயமாகவும் அமைக்க வேண்டும்; பத்து முதல் இருபத்தைந்து விழுக்காடு வரை இந்தியப் பண்பாட்டை எதிரொளி செய்யுமாறு அமைக்கவேண்டும்; சமற் கிருதத்தை மாணவர்கட்குக் கட்டாயப் பாடமாக வைத்துப் பயிற்ற வேண்டும்; வேதங்கள் உபநிடதங்கள் முதலானவற்றைப் பாடத் திட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும்; நாடெங்கும் சமற்கிருதப் பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்பனவாம்.

இவற்றுள் இந்துவியமயம், இந்தியத் தேசியமயம் என்பனவற்றுக் குப் பாரதீய சனதாவின் அகரமுதலியைப் பொறுத்தவரை இங்குள்ள தேசிய இனங்களை அடக்கியொடுக்குவது, அவற்றை அடையாளம் தெரியாமல் அழிப்பது என்றும், இறையியல் என்பதற்கு இந்துவியம் என்றுமே பொருள்.

அஃது இருக்கட்டும், முற்காலத்தில் தேவமொழியாகிய சமற் கிருதத்தை நிலத்தேவர்(பூசுரர்)களான ஆரியப் பார்ப்பனர் மட்டுமே கற்கவேண்டும்; அவர்கள் வேதம் ஓதுதலை வேறு சாதியார் தெரியாமற் செவிமடுத்தால்கூட அதற்குத் தண்டனையாக அவர்களுடைய காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்று செய்யப்பட்டிருந்த கட்டுக ளையெல்லாம் அறுத்தெறிந்துவிட்டு, அனைவரும் சமற்கிருதத்தைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும்; வேதங்கள் முதலியவற்றை ஓத வேண்டும் என்று திட்டம் வகுத்திருப்பது பா.ச.க. வினரும் அவர்தம் உடன்சுற்ற இயக்கத்தினரும் கொண்டுள்ள பரந்த நோக்கத்தையும் முற்போக்கு மனப்பான்மையையும் காட்டவில்லையா என்று சிலர் வினவக்கூடும்.

ஆனால், அவ்வாறு எண்ணுவதற்கு உண்மை இடந்தரவில்லை. முன்னர் மற்றவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நிலைப் படுத்திக்கொள்ளவே தம்மைத் தவிர மற்றவர்கள் அவற்றைப் படிக்கக் கூடாது என்று வரையறை வகுத்தனர். இப்பொழுதும் மற்றவர்கள்

கல்வியறிவு பெற்று மேல்வந்துவிடக் கூடாது என்பதற்காகவே அவற்றைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்கின்றனர். இரண்டுக்குமே அடிப்படை தந்நல வெறியும் ஏமாற்றுத்தனமுமேயாகும்.

தலைமுறை தலைமுறையாகக் கல்வியைத் தம் தனியுடைமை யாக்கித் தம்மளவில் முடக்கிக் கொண்டவர்கள், அதிலும் சமற் கிருதத்தைத் தமக்கே உரியதாக வகுத்துக்கொண்டவர்கள் கல்விக் கூடத்தில் — பாடத்திட்டத்தில் சமற்கிருதம் இடம் பெற்றால் எளிதாகக் கற்று வெற்றிபெற்றுவிட முடியும். ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுக ளாகக் கல்வி மறுக்கப்பட்டவர்கள், தமக்கு இயல்பான தாய் மொழியைப் பேசுவது தவிர, எழுதவோ படிக்கவோ தெரியாதவர்க ளாயிருந்து இந்தத் தலைமுறையிற்றான் பள்ளிக்கூடத்தின் படிக்கட்டை மிதித்தவர்கள் மேற்படியாரோடு போட்டியிட்டுப் படிக்கவோ அதில் வெற்றிபெறவோ இயலாது என்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லை.

பா.ச.க.வுக்கும் அதன் பின்னணியில் உள்ள உடன்சுற்ற அமைப் புகட்கும் இது தெரியாததன்று. மிகத் தெளிவாகத் தெரிந்திருப்பதாற்றான் இவ்வாறு கல்வித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது வரையறுக்கப்பட்ட இந்தி என்பது முன்னை உருதுக் கலப்பைக் களைந்துவிட்டுச் சமற்கிருதமயமாக்கப்பட்ட இந்தி யாகை யால் இந்தியார்க்கு இத் திட்டம் உவப்பாய் இருப்பதில் வியப்பில்லை.

இன்றைக்கும் சிற்றூர்ப்புறங்களில் கல்வியில் நாட்டங் கொண்டாலுங்கூடத் தொடக்கப் பள்ளியளவிலேயே படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுபவர்களும் எட்டாம் வகுப்பில் முட்டுப்பட்டுப் பள்ளியைவிட்டுப் போய்விடுபவர்களும் பத்தாம் வகுப்பைத் தாண்ட முடியாதவர்களும் பன்னிரண்டாம் வகுப்பைக் கடக்கமுடியாதவர்க ளுமாகப் படிப்படியே கல்வியைக் கைவிட்டுவிட நேர்கிறது. இவற்றை யெல்லாம் மீறிக் கல்லூரியில் பட்டப் படிப்பை எட்டிப்பிடிப்பவர்கள் எண்ணிக்கை நூற்றுக்குப் பத்து விழுக்காடு என்னுமாறு மிகமிகக் குறைவே.

இத்தகைய அவல நிலைக்குக் கரணியம், பெரும்பாலோர் கல்வி யறிவு பெறுதற்குத் தகுதியற்றவர்கள் என்பதோ, அவர்கள் அனைவர்க் குமே குடும்பச் சூழல் இடந்தரவில்லை யென்பதோ அன்று. தாய்மொழி வழிக் கல்வியாக இல்லாமல் பிறமொழிவழிக் கல்வியின் அழுத்தமே என்பது கண்கூடு.

ஆங்கிலேயர் வந்து – ஆங்கிலம் அறிமுகமாகி ஏறத்தாழ நானூறு ஆண்டுக்காலம் ஆகியும் கல்லூரி மாணவனொருவன் தனக்கு ஆங்கிலம் சரவரத் தெரியவில்லை என்று வெட்கப்பட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் நிலை நிலவுகிறது.

இவ்வாறிருக்க, அரிதின் முயன்று சமற்கிருதக் கல்வியைக் கட்டாயமாகக் கற்பதாகவே வைத்துக்கொண்டாலும் அதனாற் பெறும் பெரும்பயன்தான் என்ன?

இந்தி படித்தால் இந்தியாவெங்கும் எளிதில் வேலை வாய்ப்புப் பெறலாம் என்றும், ஆங்கிலம் படித்துவிட்டாற்போதும்; உலகின் எந்த மூலைமுடுக்குக்கும் மிக எளிதாகப் போய்வரலாம் என்றும், அங்கெல்லாம் எத்தனை யெத்தனையோ வேலை வாய்ப்புகள் காத்துக் கிடக்கின்றன என்றும் சிலர் வாரிவிடுவதுபோலச் சமற்கிருதம் படித்தால் என்னென்ன நன்மைகள் கிட்டும், எத்தகைய பதவிகளைப் பெறலாம் என்று யாரும் பட்டியலிட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை, சமற்கிருதம் படித்தால் 'சிவலோகப் பதவி', 'வைகுந்தப் பதவி'களை எளிதில் பெறலாம் என்று கூறவுங் கூடும்!

இனி, தமிழ்நாட்டில் உயரற மன்ற நடுவர் ஒருவர், சமற்கிருதம் கடவுளோடு பேசும் மொழி என்று விளம்புகிறார். சிற்சில கோயில்களில் தமிழ் வழிபாடு அரும்பிய நிலையில் அதைத் தடைசெய்ய வேண்டுமென்று ஒரு பார்ப்பன முழுமகன் உயரற மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார். அவர் வழக்குத் தொடுத்ததனாலேயே தமிழ் வழிபாடு தொடர்பான கிளர்ச்சி மூண்டுள்ளது.

இவற்றை யெல்லாம் சுதாங்கனோ, சோவோ அறியாதவர்களாக இருக்க முடியாது. ஆனாலும், தங்களைப் பெருங் குமுகாயப் பொறுப் புணர்ந்தவர்களாகவும் சீர்திருத்தச் செம்மல்களாகவுங் காட்டிக் கொண்டு தமிழுணர்வாளர்களை இழிவுறுத்தி ஏளனம் பேசுகின்றனர்.

இவ்வாறெல்லாம் பாரதீய சனதாக் கட்சியினரின் முகமூடி முற்றிலுங் கிழிந்து அவர்களுடைய உண்மையான கொடிய முகம் தெளிவாகத் தெரிந்தாலுங்கூட, இங்குள்ள அரசியற் கட்சிக்காரர்கள் பலர், தந்நலவெறியும் பதவிவேட்கையும் தம்மைப் பிடர்பிடித்து உந்துதலால் தமிழகத்தை பாரதீய சனதாக் கட்சி அரசிடம் ஒட்டுமொத்தமாக அடகுவைக்கப் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழியம் பேசி மக்களிடையே சாய்கால் பெற்றுக் கட்சிகளை வளர்த்துக்கொண்டு தங்களையும் பலவகையில் உயர்த்திக் கொண்டவர்கள், இந்தியத் தேசியச் சாய்க்கடை யோட்டத்தில் இணைந்து தங்கள் ஊறிக் கொண்டிருப்பதும் அன்றி, இன்று இந்துவியத்துக்கும் துணைநின்று இயங்கி, அது தழைத்து வளர வழி வகுத்துக்கொடுத்து, எருவாகி நிற்பது அறக்கொடிது! இத்தகைய இழிதகையாளர்களை மக்கள் அடையாளங் கண்டு, அவர்களை விலக்கவும் வீழ்த்தவும் முனைப்புற வேண்டும். அதுவே இன்றைய தலையாய தேவை!

— இறை

# சாலையார் இன்றில்லை!
# வேலையார் ஏந்துவார்?

— உணர்ச்சிப் பாவலர் *காசிஆனந்தன்* —

மேலையார் வெள்ளையர்
ஆட்சியின் பின் எம்மை
மேய்க்க வந்தார்!
தோலையார் உரிப்பார்என்
றேங்கிநாம் நின்றநாள்
பகை தொலைத்த
சாலையார் இன்றில்லை....
என்செய்வோம்? என்செய்வோம்?
தமிழென்னும் கூர்
வேலையார் ஏந்துவார்
இனி? நெஞ்சம் தழல் மூழ்கி
வேகு தையா!

வெண்ணிலாவைப் பூவைப்
பாடினார் சில்லோர்! தம்
விழி பறித்த
பெண்ணினார் எழில்தன்னைப்
பாடினார் சில்லோர்! நீ
பெருமூச் சோடும்
எண்ணினாய் தமிழர்தம்
இழிநிலை... இனம் வாழப்
பாடி நின்றாய்...
கண்ணின்நீர் கொண்டெங்கள்
தமிழினம் உனைஎண்ணிக்
கதறுதையா!

செந்தமிழ் ஈழத்தின்
துணையாகிச் செருக்களம்
அதிர நிற்கும்
வெந்தழல் நெஞ்சினார்
புலிவீரர் குரலாகித்
தமிழகத்தில்
கொந்தளித் தெழும்சூறைக்
காற்றாகித் 'தமிழீழம்
கோலோச் சும்நாள்

எந்த நாள்? எந்த நாள்?'
ஏனநின்றார்... ஏன்சென்றார்?
ஏன் சென்றாரோ?

பெரியார்போல் 'தமிழர்நாம்'
என்றார்த்த பெருவீரர்
ஆதித்தர் போல்
எரிமலை என்னும்பா
வேந்தர்போல் எம்பெருஞ்
சித்திரர்போல்
'அரியசெந் தமிழகம்
தமிழர்க்கே' என்றார்த்த
அஞ்சா நெஞ்சர்
பிரிவினைத் தாங்குதல்
இயலாராய்ப் பித்தராய்ப்
புலம்புகின்றோம்!

ஐயா! நீ எங்குற்றாய்?
எங்குற்றாய்? அழுகின்றோம்...
அழுகின் றோம்பார்!
கையாலாகாதார் முன்
வீரராய் வாழ்ந்தேநீ
கண் துயின்றாய்...!
மெய்யா? நின் மெய்தன்னை
ஆய்வாராம் மருத்துவர்...
மெய்தான் என்றால்...
'உய்யாதா தமிழினம்'
எனவாழ்ந்த நின்உள்ளம்
ஆய்வார் எங்கே?

## இருபத்தாறு தமிழர் உயிர்காப்புக் கொடையாக தாலியை வழங்கினார் தேன்மொழியருளி.

பாவலரேறு ஐயா அவர்களின் மகளும் சொல்லாய்வு அறிஞர் அருளியாரின் துணைவியாருமாகிய மா. தேன்மொழியருளி, இருபத்தாறு தமிழர் உயிர்காப்புக் கொடையாகத் தாமணிந்திருந்த தாலியை வழங்கினார்.

தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில், தி.பி. 2029 துலை 14,15 ஆகிய நாட்களில் (31.10.'98—1.11.'98) சென்னையில் நடைபெற்ற தமிழர் எழுச்சிப் பேரணியிலும் தமிழகப் பெருவிழாவிலும் கலந்து கொண்டு, அவ்விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் தேன்மொழியருளி தம் தாலிக்கொடை வழங்கினார். "யார் சொன்னார்கள் பாவலரேறு மறைந்துவிட்டார் என்று?" கொடையைப் பெற்றுக்கொண்ட இருபத்தாறு தமிழர் உயிர்காப்புக் குழுவின் பொருளாளர் முனைவர் சுப. வீரபாண்டியன் இவ்வாறு கூறினார்.

# தமிழகக் கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறையே வேண்டும்

— முனைவர் சாலினி இளந்திரையன் —

கடவுள் உண்டா இல்லையா என்பதைப் பற்றியோ, வழிபாடு தேவையா இல்லையா என்பதைப் பற்றியோ இங்கே விளக்க வரவில்லை. இருக்கின்ற கோயில்களில் நடைபெறுகின்ற வழிபாடு தமிழில்தான் நடைபெற வேண்டும் என்பதற்கான அடிப்படையை விளக்குவதே என்னுடைய நோக்கம்.

தமிழகத்தில் பழங்காலந்தொட்டு இருந்து வந்துள்ள வழிபாட்டு முறை எப்படிப்பட்டது, அது எங்கே எப்படி மாற்றப்பட்டது, அப்படி மாற்றப்பட்ட ஒன்றைத் திரும்ப மாற்றித் தமிழ் வழிபாட்டுக்கு கொண்டுவருவதில் என்ன தவறு என்று பார்த்தால்தான் சமற்கிருத வழிபாட்டின் ஆளுமையை எதிர்த்தே ஆகவேண்டும் என்பது நன்கு புலப்படும்.

கழக(சங்க) இலக்கியத்தில் கடவுளின் வழிபாட்டு இடம் ஊர்ப் பொது மன்றத்திலேயே இருந்தது. 'மன்ற மராஅத்த பேமுதிர் கடவுளை' வழிபடுகின்ற ஒரு பெண்ணைக் குறுந்தொகை 87-ஆம் செய்யுளில் காணுகின்றோம். ஊர் மக்கள் கூடுகின்ற பொது மன்றத்தில் அமைந்த மரத்தின் அடியிலேயே கடவுளின் இருப்பிடம், அதாவது கோயில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அடுத்துக் கோயிலுக்கு அம்பலம் என்ற சொல்லும் வழங்கப்பட்டு வந்துள்ளது. வெள்ளியம்பலம் மதுரையையும் பொன்னம்பலம் தில்லையை (சிதம்பரத்தை)யும் நெடுகக் குறித்து வந்திருப்பதை அறிகிறபோது தமிழர்களின் வழிபாட்டு முறையைப் பற்றியே ஒரு தெளிவு ஏற்படுகிறது. ஓரிருவர் மட்டுமே அறிந்திருந்த ஒரு செய்தியைப் பலரும் அறியும் படியாகச் செய்தலை அதாவது பொதுமைப்படுத்துவதை அம்பலப் படுத்துதல் என்று இன்றும் கூறி வருகிறோம். இவ்வாறு இறைவனைத் தனித்தனியாகத் தங்கள் தங்கள் இல்லங்களில் வழிபடுகின்ற மக்கள் எல்லோரும் வந்து பொதுவாக வழிபடுகின்ற இடமே அம்பலம் என்ற பெயரில் வழங்கியது என்று கொள்ளவேண்டியுள்ளது.

கோவின் அதாவது அரசனின் இல்லமே கோயில் என்று அழைக்கப்பட்டது. அதுவே ஊரில் பெரிய இல்லமாக இருந்திருக்க வேண்டும். 'உண்டாயின் பதம் கொடுத்து, இல்லாயின் உடன் உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவனாக' அரசன் இருந்த வரை

அரசனின் இல்லமே கோயில்; எல்லா மக்களும் சேர்ந்து வழிபடும் இடம் அம்பலம்.

அரசனுக்குப் பாதுகாப்புத் தேவை அதிகரிக்க அதிகரிக்கப் பாதுகாப்பு அரண்கள் எழுப்பப்பட்டு, அரசனின் இல்லம் அரண்மனை ஆயிற்று. சமயத்தின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க வழிபாட்டு இடம் பெரிதாகியது. பெரிய இல்லம், கோயில் என்ற பெயரைத் தனதாக்கிக் கொண்டது. கட்டடக் கலையும் வளரவே ஊரின் புறத்தே நெடுந் தூரத்தில் வரும்போதே கண்டுகொள்ளக் கூடியதாகக் கோயிற் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. காட்டுப் பகுதியில் எந்த மரங்கள் அதிகமாக இருந்தனவோ அப்பகுதியிலிருந்த ஊருக்கு அந்த மரத்தின் பெயரே (எடுத்துக்காட்டு — புளியங்காடு, ஆர்க்காடு, மரைக்காடு) இடப்பட்டுள்ளது. இதுவரை ஊரின் பெயரும் கோயிலின் பெயரும் இறைவன் இறைவியின் பெயர்களும் தமிழிலேயே இருந்தன. பரிபாடலும் தேவார திருவாசக திருநாலாயிர முமே வழிபாட்டுப் பாடல்களாக ஒலித்தன. அரசியலிலே பார்ப்பனர்களின் சாய்கால் அதிகரிக்கத் தொடங்கிய வேளையில் தான் இங்கே மன்று, அம்பலம் என்ற சொற்கள் மறைக்கப்பட்டு 'ஆலயம்', 'சந்நிதி' போன்ற புதுச்சொற்கள் ஏற்கப்பட்டன. வட மொழியில் 'ஆலயம்' என்ற சொல்லுக்கு எந்தத் தெய்வத் தன்மையும் கிடையாது. இடம் என்று மட்டுமே பொருள். ஆடை விற்பனை செய்யும் இடம் 'வஸ்திராலயா'; கழிப்பிடம் 'சௌசாலயா'. ஆலயம் என்ற அந்தச் சொல்லை இங்கே நுழைக்க அதன்மேல் புனிதத் தன்மையை ஏற்றியது போலவே, மரா மரங்கள் நிறைந்த மரைக்காடு மறைக்காடாகி வேதாரண்யமும் ஆயிற்று. முதுகுன்றம் விருத்தாசலம் ஆனதும் புளியங்காடு திண்டிவனம் ஆனதும் அப்படித்தானே? உலக முதல்வியும் உலக முழுதுடையாளும் 'புவனேசுவரி'யாகவும் 'அகிலாண்டேசுவரி'யாகவும் ஆனதில் வியப்பு என்ன இருக்கிறது? அண்டத்தையே பிறப்பித்தவன் என்று அவர்களே சொல்லுகிற ஒருவனைப் பிண்டமாக்கிக் கருவறைக்குள்(கர்ப்பக்கிருகத்தில்) தள்ளி விட்ட கொடுமை, பார்ப்பனர்களின் தன்னலத்தில் விளைந்த செயலன்றோ? எண்ணிப் பாருங்கள். அந்த கருவறையைக் கைப் பற்றிக் கொண்டதும் தமிழை வழிபாட்டு முறைகளிலிருந்து நீக்கி மந்திரம் என்றும் தந்திரம் என்றும் பாராயணம் என்றும் பகவத் கைங்கரியம் என்றும் படிப்படியாக வந்து புகுந்து கொண்டது சமற்கிருதம். (தமிழை நாட்டிலிருந்தே ஒழிக்க அவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமா? தமிழையும வடமொழியையும் கலந்து மணிப்பிரவாள நடையை வலிந்து புகுத்திப் பார்த்தார்கள். தமிழ் தவிர வேறு எந்த மொழியைச் சேர்ந்தவர் தமிழ்நாட்டுக்கு வந்தாலும்

அவரோடு இணைந்து தமிழை ஒழிக்க இன்றளவும் துணைபோய்க் கொண்டு இருக்கிறார்கள். தஞ்சையில் நாயக்கர் அவையில் தெலுங்கர்கள் இசைபாடினார்கள். அதை இன்றளவும் தமிழ்ப் பார்ப்பனர்கள் விடவில்லையே. இசுலாமிய அரசுகள் வந்தபோது நுழைந்த ஜில்லா, தாலுகா, தாசில்தார் போன்ற உருதுமொழிச் சொற்களைத்தானே (மாவட்டம், வட்டம், வட்டாட்சியர் போன்ற நல்ல தமிழ்ச் சொற்கள் வந்த பிறகும்) பார்ப்பனர்கள் இன்றும் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலேயர் ஆளவந்ததும் அதையும் பற்றிப் பிடித்துக் கொண்டு தமிழ் 'தமிங்கில'மாக ஆகிவிடாதா என்றே குறி வைக்கிறார்கள். இங்கே இவற்றை இவ்வளவு விரிவாகச் சொன்னதற்குக் காரணம், தமிழை வீழ்த்த முயன்ற பல முயற்சிகளில் ஒன்றுதான் கோயில்களில் சமற்கிருத வழிபாடு என்பதை எடுத்துக் காட்டவே ஆகும்.

நிலைமை இவ்வாறு இருக்க, கோயில்களில் சமற்கிருத வழிபாடு நீடிக்கவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் அந்தக் கோயில்க ளெல்லாம் 'ஆகம' முறைப்படி கட்டப் பெற்றவை என்றும் காசுமீரத் திலிருந்து கன்னியாகுமரி வரை எல்லா இந்துக் கோயில்களிலும் ஒரே மாதிரியான வழிபாடு இருப்பதால் அதை மாற்றக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள்.

மக்களிடமிருந்து பணத்தைத் தண்டிக் கோயில் கட்டப் பணம் போட்டவன் அரசன். கோயிலைக் கட்டியவர்கள் கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள். இதில் எங்கே வந்தார்கள் பார்ப்பனர்கள்? தமிழர்கள் ஏமாறிய காலத்தில் ஏற்றம் கொண்ட அவர்கள் 'கும்பாபிஷேகம்' என்னும் குடமுழுக்கை நடத்திக் கோயிலைத் தெய்வத்தன்மை யுடையதாக்கி ஆகம நெறிமுறைகளுக்கு உட்படுத்தி விட்டார்களாம். எது தீட்டானாலும் எவர் தீட்டா னாலும் கங்கை நீரை(சாய்க்கடை நீராக இருந்தாலும் கங்கை நீராக மாற்றிப் பெயர் கொடுத்து விடுவார்கள்) அதன்மேல் அல்லது அவர்கள் மேல் தெளித்துத் தூய்மையாக்கிவிட்டதாகத் தெய்வத் தன்மைப்படுத்திவிட்டதாகச் சொல்லுவதே அவர்களின் வாழ்க்கை நடைமுறை. இப்படித்தான் ஆகம நெறியில் கட்டப்பட்ட கோயில்க ளாயின நம் தமிழர்களின் கோயில்கள்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட செய்தியாவது சரியானதா என்று பார்த்தால் – காசுமீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள இந்துக் கோயில்களில் சமற்கிருதத்தில்தான் வழிபாடுகள் நடந்து கொண்டிருக்கின்றனவா என்றால் இல்லை. (ஒருவேளை அவர்க ளுடைய ஆசையாக அது இருக்கலாம். ஆனால் நடைமுறை அதுவன்று.) 'காசிக்குப் போய் கருமத்தைத் தொலைக்கவேண்டும்'

என்று இந்துக்கள் என்று சொல்லப்படுவோரால் தெய்வத்தன்மை யுடையதாகக் கருதப்படுகின்ற காசி விசுவநாதர் கோயிலிலே வழிபாடு எப்படி நடத்தப்படுகிறது? அங்கே 'மூலஸ்தானம்' என்ற தனிக் கருவறை என்றும் இல்லை. கோயில் மண்டபத்துள் இருக்கும் அந்த சிவகொழுந்தை(சிவலிங்கத்தை)த் தொட்டு வழிபடும் உரிமை எல்லோருக்கும் உண்டு. அவரவர் அவரவர் மொழியில், அவரவருக்கு விருப்பமானதைச் சொல்லி வழிபட முடியும். அங்கே சமற்கிருதத் துக்கோ மற்ற மொழிகளுக்கோ தனி உரிமை ஏது? சரி, அதுதான் போகட்டும்; இந்த நூற்றாண்டில் எழுப்பப்பட்ட வடநாட்டுக் கோயில்களில் ஆகம முறைகள் எங்கே போயின? காசியிலும் தில்லியிலும் 'கீதை உபதேசம்' நடைபெற்ற இடமாகக் குறிக்கப்படும் குருச் சேத்திரத்திலும் இலட்சுமி நாராயணர் கோயில். என்று பிருலா கட்டி இருக்கிறாரே அந்தக் கோயில்கள் எல்லாம் இலட்சுமி நாராயணர் பெயரையே மறைத்து பிருலா மந்திர் என்று வழங்கப் படுவதோடு, மக்களே நேர் நின்று தானே வழிபடுகிறார்கள். அது எந்த மொழியிலும் இருக்கலாமே. கல்கத்தா காளிகட்டத்தில் வங்காளமொழி இல்லாமல் சமற்கிருதம் நுழைந்துவிட முடியுமா? பனிமலையில் சிவகொழுந்தைக் காண அமர்நாத்துக்குச் செல்லும் அடியயார்கள் தங்கள் தங்கள் மொழியிலேயே பாடிக்கொண்டு சென்றுதானே கண்டு மகிழ்ந்து திரும்புகிறார்கள். இங்கெல்லாம் நுழைய முடியாத சமற்கிருதம் தூங்கினவன் தொடையில் திரித்த வரையில் லாபம் என்றும் தமிழ்க் கோயிலுக் குள் இடையில் வந்து புகுந்த சமற்கிருதம் அங்கிருந்து செல்ல அடம் பிடித்துக்கொண்டு நிற்பதைப் பார்க்கும்போது வேடிக்கையாகவும் இருக்கிறது; வருத்த மாகவும் இருக்கிறது.

காலம் மிகவேகமாக மாறிக்கொண்டு வருகிறது. இதை மேல் சாதி – மேல்வர்க்கம் புரிந்துகொள்ள வேண்டும். சேற்றிலும் சேரியி லும் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்கள் இன்று இந்தியக் குடியரசின் முதல் மகனாக ஆகும் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். 'படிப்பே உங்களுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது; மாடு மேய்க்கத்தான் தகுதி(லாயக்கு) என்று நீங்கள் திசைதிருப்பிவிட்டவர்களின் வழிவழி மக்கள் இன்று உங்கள் மக்களையும் கல்வியில் வென்று முதன்மை பெறும் தகுதியைப் பெற்று வருகிறார்கள் என்பதை இந்த ஆண்டு நுழைவுத் தேர்வு முடிவே உங்களுக்கு உணர்த்தி இருக்க வேண்டுமே. எனவே, 'கடவுளுக்குச் சமற்கிருதத்தில் சொன்னால்தான் புரியும் என்ற கட்டுக்கதைகளை எல்லாம் விட்டு நடைமுறைக்கு ஒத்த வாழ்க்கைக்கு வாருங்கள். தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் தமிழில் வழிபாடு செய்வது அவர்களின் உரிமை அந்நியர்கள் எந்தக்

கொம்பாதிக் கொம்பனாக இருந்தாலும் அவன் அயலவர் என்றும் நாடு விடுதலை அடைவதே சரியானது என்றும் எப்படிச் சொல்லுகிறோமோ அதுபோலத் தமிழ்க் கோயில்களுக்குள்ளே இடையில் வந்து புகுந்த சமற்கிருதம் அந்த இடத்தைவிட்டு வெளியேறுவதுதான் சரியானதாக இருக்க முடியும் என்பதை நம் நாடு அரசியல் விடுதலை பெற்று ஐம்பதாண்டுகள் ஆகின்றன என்று சொல்லிப் பொன்விழாக் கொண்டாடும் இந்த ஆண்டிலாவது உணருவார்களா? இதை அவர்கள் உணர்ந்து தங்களைத் திருத்திக் கொள்ளாவிட்டால், அவர்கள் தமிழ் நீரோட்டத்திற்கூட இணைய முடியாத தனித்திட்டாக நின்றுவிடுவார்கள். அதன் விளைவு என்ன ஆகும் என்று சிந்தித்து அவர்களே நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இதை அவர்கள் செய்யாவிட்டால் அவர்கள் சொல்லுகிற தேசிய நீரோட்டம் ஒரு கானல் நீரே என்பதைத் தனியே எடுத்துச் சொல்லவேண்டியது இல்லை! ❍

புதிய பதிப்பாக வெளிவந்திருக்கிறது!

பாவலரேறு ஐயா அவர்களின்

**இட்ட சாவம் முட்டியது**



- ❍ தமிழினத்திற்கு இரண்டகம் செய்து அழிவுக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கிய இந்தியாவின் மேனாள் தலைமையமைச்சர் இராசீவ், பாவலரேறு ஐயா அவர்களின் சாவப்படி அழிந்த வரலாறு.
- ❍ பாவலரேறு ஐயா அவர்கள் மனங்கொதித்துப் பாடிய சாவப் பாடலும், சரியாக மூன்றாண்டுகளுக்குப்பின் அது நிறைவேறியது பற்றிய விளக்கமும்!

**விலை : உரு. 10.00**

அஞ்சலில் பெற உரு. 15.00 அனுப்புக!

(பதிவஞ்சலில் பெற விரும்புவோர் உரு. 23 அனுப்புதல் வேண்டும்)


தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்,

5, அருணாலத் தெரு, சென்னை - 600 005.

# கோயில்களில் சமற்கிருத வழிபாட்டின் ஆளுமையை எதிர்த்துக் கொட்டும் மழையிலும் ஒலிமுழக்கப் போராட்டம்!

"தமிழர்க்குத் தமிழே வழிபாட்டு மொழி! சமற்கிருத வழிபாடு நமை வீழ்த்தும் வழி!!' என்னும் முழக்கத்தை முன்வைத்துத் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் சமற்கிருத வழிபாட்டின் ஆளுமையை எதிர்த்துக் கடந்த துலை 16 அன்று(2.11.98) கொட்டும் மழையிலும் சென்னை — பாரிமுனைக் குறளகம் அருகில் ஒலிமுழக்கப் போராட்டம் நடைபெற்றது.

புலவர் இறைக்குருவனார் தலைமையில் நடைபெற்ற இப் போராட்டத்தை முனைவர் சாலினி இளந்திரையனார் தொடங்கி




வைத்தார். 'எழுகதிர்' அரு. கோபாலன், தமிழ்த் தேசப் பொதுவு டைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் பெ. மணியரசன், பன்னாட்டுத் தமிழுறவு மன்றத் தலைவர் பெரும்பாவரசு வா.மு. சேதுராமன், தமிழியக்கத் தலைவர் இரா. இளவரசு ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து பெய்த மழைக்கிடையில் அன்பர்கள் குடைகளைப் பிடித்துக் கொண்டும் நெகிழித் தாளை உயர்த்திப் பிடித்துக் கொண்டும் பெரும்பாலோர் நனைந்துகொண்டும் முழக்கம் எழுப்பினர்.

தென்மொழி அவையம் ஒருங்கிணைத்து நடத்திய இப் போராட்டத்தில், வே. ஆனைமுத்து(மா.பெ.பொ.க.), கி.வே பொன்னையன், ச.சி. நன்னன்(த.நா.மா.இலெ.க.). புலவர் கி.த.

பச்சையப்பன்(தமிழியக்கம்), புலவர் கோ. தேவராசன்(தமிழ் வளர்ச்சிப் பேரவை), புலவர் திருவேங்கடம், புலவர் குமர. தன்னொளியன் சா. சந்திரேசன், துரை. தென்னவன் (பைந்தமிழ்ப் பாசறை), மா. பூங்குன்றன்(உ.த.மு.க.), எழில்இளங்கோவன் (ஆதித்தமிழர் பேரவை), தாம்பரம் தமிழ்மணி(த.த.இ.), உலகமுதல்வன் (த.ஒ.வி.இ.), வெற்றிச்செழியன்(பாவேந்தர் தமிழ் அறிவியல் பேரவை),



செல்வநம்பி(தமிழக இளைஞர் பேரவை), ப. வேலுமணி, சாரநாதன் (மக்கள் எழுச்சி மன்றம்), நடராசன்(மக்கள் பண்பாட்டுப் பேரவை) பாவலர் க.ப. சின்னராசு(தமிழ் மீட்புப் பேரவை), அ.சி. சின்னப்பா (தையற் கலைஞர் சங்கம்), பாவலர் இராமச்சந்திரன்(தமிழ்த் தன்னுரிமை இயக்கம்) ஆகியோரும், இறை. பொற்கொடி, மா. தேன்மொழியருளி, இசைமொழி முதலான மகளிர் பலரும் பங்கேற்றனர்.

அவையத்தையும் பல்வேறு அமைப்புகளையும் சார்ந்த க. குழந்தைவேலன், இளவழகன், ஈழவேந்தன், செயராமன், சடகோபன், கிருட்டிணமூர்த்தி, சுப்பிரமணியன், அன்பு, புகழேந்தி, தமிழ்ப்பாண்டியன் உள்ளிட்ட நூற்றைம்பது பேர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

காலை 11 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிவரை நடைபெற விருந்த இப் போராட்டம் தொடர்ந்த பெருமழையின் காரணமாகப் பிற்பகல் 3 மணியளவில் நிறைவெய்த வேண்டியதாயிற்று.

'விடுதலைச் சிறுத்தைகள்' தலைவர் திருமாவளவன் முதலான முப்பதின்மரும், தமிழ் – தமிழர் இயக்கத் தலைவர் முனைவர் சுப. வீரபாண்டியன், தலைநகர்த் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் த. சுந்தரராசன் முதலானோரும் பிற்பகல் 3 மணிக்குமேல் போராட் டத்திற்கு வருகைதந்தமையால் அவர்கள் போராட்டத்தில் பங்கேற்க இயலவில்லை. ■

# உலகின் கதை!

— 'தமிழம்' பன்னீர் —

(கிட்டத்தட்ட ஐந்நூறு கோடி ஆண்டுகளுக்கு முன் வளிமமும் (GAS) தூசிப் படலமும்(DUST) நிறைந்திருந்த விண்மீன்கள் சுழல் வட்டத்திலிருந்து (WHIRLING DISC) ஞாயிறு மண்டலம் (SOLAR SYSTEM) அமைந்தது. இத்தகைய முற்றிலும் அயற் சூழலில் இருந்து நாம் இப்பொழுது வாழ்ந்துவரும் உயிர் வாழ்க்கைக்கு உகந்த ஒரு கோள் (PLANET) உண்டாவதற்கு என்ன நடந்தது?)

விண்மீன்களுக்கு இடைப்பட்ட அண்டவெளியில் பரவியிருந்த தூசியும் வளிமமும் ஒன்று சேர்ந்தபொழுது மற்ற விண்மீன்களைப் போலவே நமது கதிரவன் உண்டானது. அது எப்படி ஏன் ஏற்பட்டது என்று எவருக்கும் தெரியாது. ஆனால் புறத்தே அடர்ந்த உயிரக மண்டலம் சூழ்ந்திருக்க நடுவில் இரும்புத் தனிமம் செறிந்திருக்க முற்றும் பாறைகளால் ஆன நம் கோள் அப்போது நீடித்ததும் சிக்கல் கொண்டதுமான படிநிலை வளர்ச்சியின் (EVOLUTION) முதற்படியில் இருந்தது.

முதற்கட்டமாக ஒரு கோள் அமைவதற்குச் சரியான அளவில் சரியான பொருள்கள் தேவைப்பட்டன. ஆனால் இன்று நாம் நில வுலகம்(EARTH) என்று அறிந்துள்ளோமே இது அமைவதற்கு அப்படி வாய்ப்பு ஒன்றும் அப்பொழுது அமையவில்லை. பிறகு நடுப்பகுதி யில் இரும்புச் செறிவும், சுற்றிலும் மணல் ஊட்ட உப்புப்(SILICON MINERALS) போர்வையும்(MANTLE), அதன்மேல் மெல்லிய வலிமை யான புற ஓடும்(CRUST) கொண்ட ஓர் ஏடாக(LAYER) உலகம் உருவானது.

இந்த உலகில் முந்நூற்றைம்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பு உயிர்கள் தோன்றத் தொடங்கின. இப்பொழுது நாம் அறிந்துள்ள அளவுக்கு இந்த நிலவுலகம் அமைவதற்கு அப்பொழுது முதற்கொண்டே இடை விடாத படிநிலை வளர்ச்சியை அடைந்து வருகிறது. ஆனால் மாற்றமும் தொடர்ந்து நடைபெறுகிறது. இதற்குச் சான்றாக இந்த நிலவுலகின் உட்புறப் பொருள்களை நெருப்புக் குழம்பாகத் தொடர்ந்து வெளிப்படுத்தும் எரிமலைகளையும் (VOLCANTS) நில நடுக்கங்களையும்(EARTH-QUAKES) இதன் படிநிலை வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க நடைமுறைகளாகக் கூறலாம். நிலத்தின் மேற்பரப்பை உண்டாக்கும் தட்டுகள்(PLATES) தொடர்ந்து நகர்ந்து கொண்டுள்ளன; கண்டங்களின்(CONTINENTS) வடிவம் மாறுகின்றன.

பாறைகள் தாமாகவே தொடர்ந்த அரிப்புக்கும் சீராக்கத்திற்கும் மறு உருவாக்கத்திற்கும் உள்ளாகின்றன. இப்படிப்பட்ட நடை முறைகள்தாம் இந்த நிலவுலகை ஞாயிறு மண்டலத்தில் உள்ள மற்ற கோள்களினின்றும் வேறுபடுத்தித் தொடக்கக் கால வரலாற்றை அழிக்கின்றன.

நீரகமும்(HYDROGEN) பரிதியமும்(HELIUM) நிறைந்த ஞாயிற்றின் ஒண்முகில் மண்டலத்தில் இருந்துதான் (SOLAR NEBULA) இந்த நிலவுலகம் அமைந்தது. முகிற் படலம்(CLOUDS) இறுகத் தொடங்கிய போது ஞாயிறாக அமையவிருந்த ஒளிமீன் படலத்தின் நடுவில் குவியும் பொருள்களுக்கும் புறம் நோக்கி நகரும் கோள்களின் மூலப் பொருள்களான வளிமம் தூசிப் படலம் ஆகியவற்றுக்கும் இடையில் ஒரு சமநிலை(BALANCE) நிலவியது. அணுக்களும் (ATOMS) அணுத் திரண்மங்களும்(MOLECULES) சிறு துகள்களும் (PARTCLES) அங்குச் சுற்றிச் சுழன்றோடிக் கொண்டிருந்தமையால் தொடர்ந்து ஒன்றோ டொன்று தொடர்பு கொண்டு பெரிதாகி வரும் திரள்களாய் (LUMPS) அமைந்தன. இறுதியில் அந்தத் திரள்கள், கோள் துண்டுகள்(PLANETESIMALS) என்று சொல்லப் பெறும் அளவுக்கு 10 அயிரமாத்திரி குறுக்களவுடன் பெரியவையாய் இருந்தன. மிகச் சிறப்பான வகையில் அவை தம்முள் ஒன்றோடொன்று செயலெதிர்ச்செயல் (INTERACTION) கொண்டு ஈர்ப்பு விசை(GRAVITY) பெறும் அளவுக்குப் பெரியவையாய் ஆயின.

**நிலவுலக ஆக்கப் பொருள்கள்:**

***சில பாறைகளின் ஆக்கப் பொருட் பட்டியல்:—***

அப்பொழுது இதுதான் நடந்தது. கோள் துண்டுகள் பெரியன வாகி ஈர்ப்பு ஆற்றலைப் பெற்றபொழுது எதிர்காலக் கோள்கள் வடிவமைவதற்குக் கோள் துண்டுகளின் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட மோதல் விளைவுகளை விளங்கிக் கொள்ள ஒரு வழி யாதெனின், மாதிரி(MODEL) ஞாயிறு மண்டலம் ஒன்றை அமைத்துக்கொண்டு, அதில் இப்படிப்பட்ட ஓராயிரம் கோளங்கள்(BODIES) கதிரவனைச் சுற்றிவரச் செய்து, ஒவ்வொரு கோளத்தையும் பின்தொடர்ந்து அவற்றில் ஏற்படும் ஒவ்வொரு மோதலின் விளைவுகளையும் கண்காணிக்க வேண்டும். தனிப்பட்ட அணுத்திரண்மங்களைப் பின்தொடர்வதன் வாயிலாக ஒரு வளிமம் எப்படி நடந்துகொள்கிறது என்பதை அறிந்து கொள்ளச் செய்யும் முயற்சியைப்போல் இது இருக்கிறது. இவ்வாறு கதிரவனைச் சுற்றி வரும் கோள்கள் மோதல்களின் வெறும் எண்ணிக்கைகளைக் கணக்கிடுவதற்கே மிகுந்த ஆற்றலுள்ள கணினிக்குக்கூட (COMPUTER) அதிக நேரம் ஆகிறது. ஆராய்வாளர்கள் கோளங்களைத் தனித்

தனியாகக் கணக்குக்கு எடுத்துக் கொள்ளாமல் குழுவாக எடுத்துக் கொண்டு கணக்கிடும் சிக்கலில் தீர்வு கண்டனர். அறிவியலார் கணினி மாதிரிகளைப் பலமுறை இயக்கிப் பார்த்தனர். ஒவ்வொரு குழுவிலும் வெவ்வேறு வகை அமைப்புகளை அவை காட்டின. அவற்றிலிருந்து அவர்கள் பெரும்பாலும் பொதுவாக இருந்த முடிவுகளை நாடினர்.

ஒரு சமையம் ஒரு குறிப்பிட்ட அடர்த்தியுடைய கோள் துண்டுகள் அமைந்தபொழுது அவற்றின் சிறிய குழுக்கள் பெரிய கோளமாய் அமைவதற்கு மற்ற குழுக்களோடு கொத்தாக இணைந்ததை அந்த மாதிரி முறை காட்டிற்று. அறிவன் (MERCURY), வெள்ளி (VENUS), நிலவுலகம்(EARTH), செவ்வாய்(MARS) ஆகிய கோள்களைப் போன்று மூன்று முதல் ஐந்து வரையிலான அளவிலும் அதே வகைக் கோளப் பாதை இடைவெளியிலும் அமைந்ததாக அந்த முடிவு இருந்தது.

அந்த மாதிரிகள் அதிக மோதல்களைப் புலப்படுத்தின. உண்மையில் பெரிய கோள் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருந்திருக்கலாம். அவ்வாறு மோதுகையில் துண்டுகள் சிலவற்றையோ அல்லது அனைத்தையுமோ உருக்குவதற்குப் போதுமான வெப்பத்தை உண்டாக்கியிருந்திருக்கலாம். பெரிய கோள் துண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட தாக்க விளைவுகள் (IMPACTS) ஞாயிறு மண்டலத்தில் குறிப்பிடத்தக்க புதுமையான மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்னும் புதிய கருத்துகளும் (SUGGESTIONS) தோன்றியுள்ளன. சான்றாக வெள்ளிக்கோள் கதிரவனைச் சுற்றிவரும் தன் பாதையில் மற்ற எல்லாக் கோள்களையும் போலல்லாமல் எதிர் வழியில் சுற்றுகிறது. விண்மக்கோளின் (URANUS) காந்த முனைப்பு முனை(MAGNETTIC POLE) அதன் சுற்று அச்சுக்கு அல்லது சுழல்நடு முனைக்குச் செங்குத்தாக உள்ளது.

செவ்வாய்க் கோள் அளவுள்ள ஒரு கோளம், தொடக்கக் கால நிலவுலகை மோதித் தெறித்தோடிய பொழுது ஏற்பட்ட தாக்க விளைவால்தான் நிலவு(MOON) தோன்றியிருக்கலாம் என்பதற்கு அத்தகைய மோதல்களில் இருந்து விளக்கம் கிடைக்கிறது. அப்படிப் பட்ட மாபெரும் மோதுதலால் கோளங்களின் பாறைகள் வெட்ட வெளியில் சிதறித் தெறித்தோடியிருக்கக் கூடும். அவை ஒரு வேளை குறுங்கோள்களாக(ASTEROIDS) அமைந்திருக்கலாம். அண்டார்ட்டிகாவில் கண்ட விண்வீழ் கற்கள்(METEORITES) தொகுதியில் காணப்படும் வேதியியல் கூட்டுப்பொருள்கள், அவை செவ்வாய்க் கோளிலிருந்து வந்திருக்கக்கூடும் என்னும் புதியக் கருத்தைத் தோற்றுவிக்கின்றன. இப்படிப்பட்ட மற்றொரு பெரிய தாக்குதல் விளைவுகளால் அவை வெட்டவெளியில்(SPACE) பாய்ந்திருக்கலாம் என்றும்,

அவற்றிலிருந்துதான் செவ்வாயில் உயிரினங்கள் இருக்கக் கூடிய அறிகுறிகள் தெரிகின்றன என்றும் அறிவியலார் சிலர் கூறுகின்றனர்.

நிலவுலகம் மலர்ச்சியுற்ற பிறகுங்கூடக் குறுங்கோள்களின் தாக்குதல் தொடர்ந்தது. எனினும் தாக்குதல்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது. கருமுளைப்(EMBRIYO) பருவக் கோள்கள் பல சிறிய கோளங்களின் கூட்டத்தோடு கதிரவனைச் சுற்றி வந்தன. அவை ஒன்றோடொன்று தொடர்ந்து மோதியபோது சிறியவை உடைந்து போயின. ஒவ்வொரு வளரும் கோளைச் சுற்றிலும் இருந்த வெட்ட வெளியில் சில சிறிய கோளங்கள் இருந்தவரையில் இவ்வாறு மோதல்கள் நிகழ்ந்தன. வெட்டவெளி வெறுமையாய் ஆனபோது தாக்குதல்கள் குறைவாய் நிகழ்ந்தன. அதிகப்படி ஒருசில அயிர மாத்திரிக் குறுக்களவு கொண்ட பாறைத் தொகுப்புகள்(LUMPS OF ROCKS) சிலவே தாக்குதலுக்கு உட்பட்டன.

மற்ற பெரும்பாலான கோள்கள், துணைக்கோள்கள்(MOONS) ஆகியவற்றின்மீது நிகழ்ந்த தாக்கங்களின் அழுத்தம், அவற்றின் தொடக்கக் கால மலர்ச்சி பற்றிய கால அளவைத் (TIME SCALE) தருகிறது. ஏராளமான எண்ணிக்கையில் எரிமலைகளின் வாயுள் (CRATERS) புதைந்திருந்த அவற்றின் மேல் ஓட்டுப் பகுதிகள், குறைவாக வடுப்பட்டுள்ள(SCARRED) பகுதிகளைவிடப் பழமை யானவை என்பது தெளிவாகிறது. நம் கோளின்(நிலவுலக) மேற் பரப்பைப் பொறுத்தமட்டில் ஒன்று அது நீரால் மூடப்பட்டிருந் திருக்கும்; அல்லது சீராக்கத்திற்கு உள்ளாகும் பாறைத் தட்டுகள் (PLATE TECTONICS) வழியாகப் பலமுறை மறு சுழற்சி(RECYCLED) செய்யப்பட்டிருந்திருக்கும். தொடக்கக் கால நிலவுலகின் வரலாறு ஒரு புதிராக (MYSTERY) உள்ளது.

இவற்றிற்கு நேரிடைச் சான்றுகள் குறைவாக இருப்பினும், சில தெளிவாக உள்ளன. நிலவுலகம் நானூற்றைம்பது கோடி ஆண்டுக ளுக்குமுன் அதிக வெப்பம் கொண்டிருந்தது. அதன்பிறகு பத்துக் கோடி ஆண்டுகளிலேயே ஐயாயிரம் விசையியக்க வெப்ப(KELVIN) அளவுக்குக் குறைந்தது. கோள் துண்டுகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளத் தொடங்கிய பொழுது கருமுளைப் பருவக் கோள் வெப்பமடையத் தொடங்கியது. நிலவு அமைவதற்குக் கரணியமாக இருந்திருக்கக்கூடிய தாக்கம், பெரும்பகுதி நிலவுலகு உருகுவதற்குப் போதுமான வெப்பத்தை உண்டாக்கியது. அதனால் அதன் நடுக் கருவை(CORE) அடையக் கூடிய அளவுக்குக் கற்குழம்புப் (MAGMA) பெருங்கடல்(OCEAN) உற்பத்தியானது. நிலவு தன் படிநிலை வளர்ச்சி யில் இந்த நிலையில் முழுமையாகவே உருகிப் போனது. ஒருவேளை அது பெரிய தாக்குதல் விளைவால் தன்னை அமைத்துக்

கொண்டதால் இருக்கலாம். ஆனால் இந்த நிலையில் நிலவின் வரலாறும் நிலவுலகின் வரலாறும் வேறுபடுகின்றன. 'அப்பலோ' வான்வெளிச் செலவினர்க்கு இப்பொழுது அறிமுகம் ஆன நிலவின் கற்குழம்புப் பெருங்கடல் மேற்பகுதி தடித்த ஓட்டுப் பளிங்கால் ஆனது. ஆனால் உருகிய நிலவுலகு வேறு வகையில் சென்றது.

நிலவு குளிர்வடைவதற்கு ஓர் எளிய பாங்கைப்(PATTERN) பின்பற்றிற்று. அந்தப் பாங்கு நிலவுலகின் உருகிய பாறைப் பெருந் தொகுதியில்(BODY)கூட அமைந்திருந்தது. பாறைப் பெருந்தொகுதி குளிர்வடையும்பொழுது முதன்முதலாக அமையக்கூடிய கனிமப் பொருள்கள்(MINERALS) குறிப்பிடத்தக்க படிக உருவங்களில் (CRYSTAL SHAPE) உருவாயின. முதலில் உருவான கனிமங்களின் வகைகள்கூட உருகிய பாறைகளின் அழுத்தத்திற்கும். தட்பவெப்பத் திற்கும் உகந்தவாறு வேறுபடுகின்றன. ஆகையால் அவற்றை இனம் காண்பதன் வாயிலாகப் பயனுள்ள தகவல்கள் கிடைக்கக் கூடும். பல எரிமலைப் பாறைகளில் களிமம்(FELDSPAR) எனப்பெறும் கனிமங்கள் உள்ளன. வெண்மை, மென்சிவப்பு அல்லது மஞ்சள் நிறக் கனிமங்கள் பெரும்பாலும் நம் வீட்டுச் செங்கற்களைப் போல் உருவமைந்துள்ளன. அவையெல்லாம் சுண்ணகம்(CALCIUM) வெடியம்(SODIUM) அல்லது சாம்பரம் (POTTASSIUM) ஆகியவற்றின் கட்டமைப்போடு(FRAME WORK) கன்மம்(SILICON) அளமியம் (அலுமினியம்), உயிரகம்(OXYGEN) ஆகியவற்றால் ஆனவை.

நிலவின் பாறைகளில் ஒளிரும் கனிமம்(PLAGIO CLASE) என்னும் ஒரு வகைக் கனிமம் உள்ளது. அது பளிங்கில் வெடியமும், சுண்ணமும் கலந்துள்ள ஒரு பொருள். பாறை குளர்ச்சியடைந்ததும் இதுதான் முதலில் அமைந்த தனிமம் என்பதை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது. இந்த ஒளிரும் கனிமப் பளிங்குகள் மொத்தக் கற்குழம்பைவிட அடர்த்தி குறைந்தவை. ஆகவே மிதந்தும் நன்றாக ஒட்டிக் கொண்டும் அவை நிலவின்மேல் ஓடாக அமைந்தன. கீழே தங்கிய கற்குழம்பு இதன் விளைவாக இறுதியில் அடர்த்தியுற்றது. முடிவாகக் கனிமங்கள் படிகங்களாகத் தொடங்கின. இந்த நடைமுறையை பகுதிபகுதியாகப் படிமமாதல்(FRACTIONAL CRYSTALLA-TION) என்பர். இந்தச் செயல் நிலவுலகில் பொதுவாக நிகழ்வது. இது தனிச்சிறப்புப் பாறை இனங்களை உண்டாக்குகிறது.

**பகுதியாக்க வகைகள்:**

**முதல் வளி மண்டலம்:—**

சில அரிய தனிமங்கள் படிகங்களிலும்(CRSTALS) மற்றவை மீதமிருந்த கற்குழம்பிலும் திரளத் தலைப்பட்டதால் அவை பாறைக

ளில் பல்வேறு அளவுகளில் பிரிந்தமைந்தன. அப்படிப் பகுதி பகுதியாகப் படிகமாதல் முறை பாறை அமைப்பில் ஒரு சிறப்புப் பங்காற்றியது என்பதற்கு ஓர் உறுதிச் சான்றாகும்.

இதற்கு வேதியியல் தனிமம் (EUROPIUM) ஒரு சான்றாகும். இந்த அருகிய(RARE) நிலவுலகத் தனிமம் இந்த முறையில் அமையும் பொழுது ஒளிரும் கனிமப் படிகங்களில்(PLAGIO CLASE CRYSTALS) திரளத் தொடங்கியது. ஒளிரும் கனிமப் பாறையில் அதிகப்படியான வேதியியல் தனிமமுள்ள நிலவின் பாறைகளில் இந்த அமைப்புப் பாங்கு தென்படுகிறது. ஆனால் தொடக்கக் கால நிலவுலகப் பாறைகளில் அப்படிப்பட்ட வேதியியல் தனிம முரண்பாடு ஒன்றும் தென்பட வில்லை. நிலவு உண்டாவதற்குக் கரணியமாகவிருந்த மிகப் பெரிய தாக்குதல் விளைவால் இந்த நிலவுலகம் உண்மையில் உருகிற்றோ இல்லையோ ஆனால் அது அதே எளிதான முறையில் குளிர்ந்திருக்க முடியாது. நிலவில் உள்ளதுபோல் அவ்வளவு சுண்ணமும் அளமியமும் நிலவுலகில் இல்லை. அதனால் நிலவுலகில் ஒளிரும் கனிமம் திரளாமற் போயிற்று. அதோடுகூட நிலவுலகில் நிலவைவிட அதிக அளவில் நீர் இருந்தது. அதனால் நிலவுலகுக்கும் நிலவுக்கும் இடையில் கோள்கள் அமைவாக்கத்தில் அதிக வேறுபாடு ஏற்பட்டது. எலும்பைப் போல் உலர்ந்த நிலவில் ஒளிரும் கனிமம் அமைந்தபோது அது அதில் மிதந்தது. ஆனால் நிலவுலகில் அது நீர்நயப்புள்ள(WET) கற்குழம்பில் மூழ்கியது.

நிலவுலகின் அடுக்கமைப்பு(LAYERED STRUCTURE) அதன் தொடக்கக் காலத்தில் இருந்தே அமையத் தொடங்கியது. நிலவுலகின் அடர்த்தி(MASS) மூன்றில் ஒரு பகுதியாயுள்ள அதன் நடுப் பகுதி (CORE) நிலவுலகு தோன்றிய பத்துக் கோடி ஆண்டுகளுக்குள்ளாகவே அமைந்தது. அதன் நடுப்பகுதி பெரும்பாலும் இரும்பால் ஆனது. கோள் துண்டுகள் மோதித் திரண்டபோது இரும்பு உருகி அதன் நடுப்பகுதிக்கு மூழ்கிச் சென்றிருக்கலாம். அப்பொழுதிலிருந்து நிலவுலகின் நடுப்பகுதிக்கும் அதன் போர்வைக்கும்(MANTLE) இடையில் கலப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நிலவுலகின் போர்வையின் வரலாறும் அதன் புற அடுக்காகிய ஓட்டின் வரலாறும் மிகவும் வேறுபட்டவை. இன்று அதன் போர்வையே படுகைகளாக(STRATIFIED) அமைந்துள்ளது. அடியில் உள்ள போர்வை நீர்மத்தில்(MANTLE FLUID) கண்டங்களாக அமைந்த ஓடுகள்(CONTINENTAL CRUST) மிதக்கின்றன. தட்டுக் கட்டமைவுகள் (PLATE TECTONICS) பெருங்கடல் ஓட்டைத் தொடர்ந்து அமைத்த வாறும் சீரமைத்தவாறும் உள்ளன.

(அடுத்த இதழில் முடிவுறும்)

# அறிவியப் பாவலர் முனைவர் சாலையார் நினைவேந்தல் நிகழ்ச்சி

அறிவியப் பாவலர் முனைவர் சாலையார் நினைவேந்தல் நிகழ்ச்சி, அனைத்துத் தமிழ் அமைப்புகள் இயக்கங்களின் சார்பில், கடந்த துலை 13 அன்று(30.10.98) மாலை, சென்னை — கோபாலபுரம் ஊரகக் கைத்தொழில் வளர்ச்சிக் கழக(காதி கிராமோத்தியோக பவன்) அரங்கில் நடைபெற்றது.

புலவர் இறைக்குருவனார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகனார், அறிஞர் சாலையார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் புகழாரம் சூட்டியும் அவர்தம் பகுத்தறிவு நெறியார்ந்த வாழ்வையும், தமிழ் இனநலப் பணிகளையும் நினைவுகூர்ந்தும் உரையாற்றினார்.

முன்னதாகப் புலவர் கோ. தேவராசன்(தமிழ் வளர்ச்சிப் பேரவை), முனைவர் கா.பொ. இரத்தினம்(தமிழ்மறைக் கழகம்), முனைவர் இரா. இளவரசு(தமிழியக்கம்), முனைவர் சிலம்பொலி செல்லப்பனார்(தமிழ்ச்



சான்றோர் பேரவை), பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), அ.அருள்மொழி (திராவிடர் கழகம்), பாவலர் க.ப. சின்னராசு (தமிழ்மீட்புப் பேரவை), கயல்(தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), வா.மு.சே. ஆண்டவர்(பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்), பொன். செல்வராசு(பம்மல் நாகல்கேணித் தமிழ்ச்சங்கம்), மா.செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), பொ.வே. பத்தவச்சலம்

(மக்களுரிமைக் கழகம்), இரா.தெ. முத்து(தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்), முத்துக்குமாரசாமித்தம்பிரான் ஆகியோரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் அனைத்திந்தியத் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் மதச் சிறுபான்மையினர் கழகத் தலைவருமான இராம் அவதேசுசிங்கு, ச.சி. நன்னன்(தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி), உவமைப் பாவலர் சுரதா ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து குடந்தைக் கீதாலயன்(அறிவியக்கப் பேரவை), பாக்கொண்டல் மா. செங்குட்டுவன்(தமிழ் எழுத்தாளர் கழகம்), 'மூவேந்தர்'முத்து(மூவேந்தர் முத்தமிழ் இலக்கியப் பேரவை), பாவலர் முல்லைவாணன்(உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்), 'எழுகதிர்' அரு. கோபாலன் ஆகியோரும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் பெ. மணியரசன், தமிழ் – தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு ஆகியோரும் திரு. ஈழவேந்தனும் உரையாற்றினர். இறுதியில் மார்க்கசிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் வே. ஆனைமுத்து உரை நிகழ்த்தினார்.

முனைவர் சாலினி இளந்திரையனார் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார்.

திரு. நா. அருணாசலம், திரு. இரா. முத்துக்குமரசாமி, பாவலர் தஞ்சைவாணன் புலவர் கி.த.பச்சையப்பன், புலவர் இறைவிழியன் (புதுவை), இரா. பதுமநாபன், மணிமார்பன் உள்ளிட்ட உள்ளூர் வெளியூர் அன்பர்கள் திரளாக வந்திருந்தனர். ❍


## தென்மொழி வெளியீடுகள் கிடைக்கும் பிற இடங்கள்

**நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் நூல்கள் தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகத்தில் மட்டுமல்லாமல் கீழ்க்காணும் இடங்களிலும் விற்பனைக்கு கிடைக்கும்.**

❍ நூழில் பதிப்பகம்,
183, வெங்கட்டரங்கம் தெரு,
சென்னை - 600 005.

❍ கீழைக்காற்று பதிப்பகம்,
10, அவுலியா சாகிப் தெரு,
எல்லீசுசாலை,
சென்னை - 600 002

❍ விசயா பதிப்பகம்,
20, அரச வீதி,
கோவை - 1.

❍ அய்யனார் பொத்தக நிலையம்
4, டட்லி மேனிலைப் பள்ளி கட்டிட வளாகம்
திண்டுக்கல் - 1.

# ஆவணத்தமிழ்

— க. குழந்தைவேலன்—
[தொல்லியல் ஆய்வறிஞர்]

மக்கள் வாழ்வு குமுகாயங்களாக நிலைகொண்ட பொழுது வாழ்க்கைத் தேவைக்காகக் கொடுத்துக் கொள்ள வேண்டிய ஊடாட்டங்களைப் பதிவு செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. இத்தேவையே ஆவணத் தோற்றத்திற்கு அடித்தளமாக அமைந்தது. எழுத்துகள் தோற்றுவிக்கப்படாத காலத்தில் விரலொற்றியும் கல்குழித்தும் உருவெழுதியும் கீறியும் தம் ஆவணங்களைப் பதிந்தனர். இத்தகைய பதிவுகளின் வளர்ச்சியே எழுத்தின் தோற்றத்திற்கான காரணிகளில் தலையான காரணியாக அமைந்தது. எழுத்துகள் தோற்றுவிக்கப்பட்டு வளர்ந்த பின்னர் ஆவணங்கள் பரந்து விரிந்து பெருகின.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆவணப்பதிவுகள் அசோகனது காலத்திற்குச் சற்று முன்னரே தொடங்கிவிட்டது எனலாம். தமிழகத்து மலை முழைஞ்சுகளிலும், மட்கல ஓடுகளிலும் பரவலாகக் கிடைக்கும் எழுத்துப் பொறிப்புகள் இதனை வெளிப்படுத்துகின்றன. இவ்வெழுத்துப் பொறிப்புகளே தொடக்க ஆவணங்கள் ஆகும். தொன்மையான இப் பதிவுகளின் வளர்ச்சி காலத்திற்கும், இடத்திற்கும், தேவைக்கும் ஏற்ப ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் எனப் பலவாறாகப் பல்கிப் பெருகின. இந்தியத் துணைக்கண்டத்தில் இதுகாறும் கிடைத்த இத்தகைய ஆவணங்களுள் எழுபத்தைந்து விழுக்காட்டிற்கு மேற்பட்டவை தமிழ் ஆவணங்களே என்பது தொல்லியலாளர் கருத்து. இவ்வாவணங்கள் அவை தோன்றிய காலத்து நாடு, இன, மொழி, குமுகாய நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகள் என்பதில் ஐயமில்லை.

தமிழ் ஆவணங்களைப் பல்வேறு அறிஞர் பெருமக்களும், ஆர்வலர்களும் தேடித் தொகுத்துப் பல்வேறு நோக்கில் ஆய்ந்துள்ளனர்; ஆய்வுசெய்தும் வருகின்றனர். இவ்வாய்வுகள் பெரும்பாலும் வரலாற்றைக் கட்டமைக்கவே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வரலாற்றின் நோக்கமே நாம் வாழ்க்கைப் பட்டாங்கில் அடைந்த வெற்றிகளையும், இழப்புகளையும் பட்டறிவாகக் கொண்டு முன்னேற்றத்தை நோக்கி வீறுகொண்டெழுச்சி பெற்று வளமான எதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்வதே என்பது சான்றோர் கருத்து.

தமிழ் ஆவணங்கள் நமது நாடு இன மொழியின வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் பல அரிய பாடங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன என்பதனை, அவற்றைக் குமுகாயக் கண்கொண்டு

பார்ப்பார் நன்கறிவர். முந்தைய காலங்களைவிட இன்றைய நடைமுறைக் காலம் உலகைச் சுருக்கி விரைந்த வளர்ச்சிப் போக்கைப் பெற்றுள்ளது. இன்றைய வளர்ச்சிக்கேற்பத் தமிழ் மொழியில் சொல் வளம் இல்லை என்ற பல்வேறு முனகல்களுக்கு அடிப்படையின்றேனும் இதனைப் புறந்தள்ளாது தீர்வு காணல் இன்றியமையாதது. இந்த நேரத்தில் வடகொரியத் தலைவர் கிம்இல்சங்கு கொரிய மொழியின் வளர்ச்சிக்குக் கூறிய கருத்துகளைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குக் கருத்தில் கொள்ளல் பயனுடையதாகும்.

சீனாவும், சப்பானும் தமது ஆளுமையில் கொரிய மொழியில் கலப்படத்தை ஏற்படுத்தியிருந்தன. அவற்றைக் களைந்து பழைய சொற்களை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதோடு தேவைக் கேற்றப் புதிய சொற்கள் தமது கொரிய மொழி வேர்ச் சொற்களில் இருந்து உருவாக்கப்பட வேண்டும் என்பதும், பிறமொழிச் சொற்களை விலக்கிக் கொரியச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்பதும் அவருடைய கருத்து.

கொரிய மொழிக்கு ஏற்பட்ட அதே நிலைமைதான் நமது மொழிக்கும் ஏற்பட்டது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பிற மத, மொழிகளின் தாக்கத்தால் தமிழ்ச் சொற்கள் பலவாறு வழக்கொழிக்கப்பட்டன. இவ்வாறு மொழி சிதைவுபடுதற்குப் பிற மொழிகளின் திணிப்பு முயற்சி மட்டுமன்றி நம்மவர்க்குப் பிற மொழிமாட்டு ஏற்பட்ட ஈர்ப்பும்(மோகம்) காரணமே. இம்மொழித் திணிப்பால் நம்முடைய ஆட்சி, ஆவணம், வாழ்க்கை, வழிபாடு, தொழில், கலை போன்ற அனைத்துத் துறைகளிலும் அயன்மொழிக் களை மண்டிவிட்டது. நம் தனித்தன்மையையும் கலைச்சொற்களையும் நாம் இழந்துவிட்டோம். இழந்த தனித் தன்மையையும், கலைச் சொற்களையும் மீட்டெடுக்க நமக்கிருக்கும் ஒரே பிடிபாடு தமிழ் ஆவணங்களே. ஆவணத் தமிழ்ச் சொற்களை மீட்டெடுத்து வழக்குப் படுத்திவிட்டால் தமிழ் மொழியின் அடித்தளம் வலுவூட்டப் பெற்று விடும். வலுவான கட்டமைப்பின் மீது நின்று நமது வேர்ச்சொல் மூலங்களிலிருந்து அறிவியற் புத்துலகுக்கு வேண்டிய சொற் செல்வங்களை ஆக்கம் செய்துவிடலாம் என்பதில் ஐயமில்லை. பெருஞ்சோற்றுக்குச் சில பருக்கைகள் பதமாதல் போலச் சில எடுத்துக்காட்டுகள்வழி நம்முடைய சொற்களின் இழப்பையும் மீட்டெடுக்கும் வாய்ப்பையும் ஆவணத் தமிழில் காண்போம்.

பொதுவாக ஒரு மொழியைப் பிற மொழியில் பெயர்த்தெழுதும் பொழுது சிறப்புப் பெயர்களை உள்ளது உள்ளவாறே எழுதுவது தான் உலக மரபு. ஆனால் வடமொழியாளர்கள் சிறப்புப் பெயர்களைக்கூட விட்டு வைக்கவில்லை. தமது கையில் பட்ட ஊர்ப்பெயர்க

ளையும், நீர்நிலைப் பெயர்களையும் மொழி பெயர்த்தெழுதினர். மொழிபெயர்க்க ஒண்ணாத பொழுது வேறு பெயரால் அழைக்கத் தலைப்பட்டனர். இதனால் நூற்றுக்கணக்கான இடப் பெயர்கள் வடமொழிப் பெயர்களாயின. போகூழிலும் ஓர் ஆகூழாக நாட்டுப் புற மக்கள், அயன்மொழியையும், அயற்பண்பாட்டையும் விரைந் தேற்றுக் கொள்ளாத் தன்மையால் மாற்றப் பெற்ற பெயர்களின் ஒரு பகுதி ஏற்றுக்கொள்ளப்படாது புறந்தள்ளப்பட்டன. ஆனால் மற்றுமோர் பெரும்பகுதி நிலைத்துத் தமிழைக் கலப்படப் பொருளாக்கிவிட்டது.

கழக்க் காலத்திற்குப் பின் வந்த பல்லவ, பாண்டிய, சேர, சோழ அரசுகள் வடமொழி வல்லாண்மையை ஏற்று வடமொழியைப் புரந்தமையோடு தம் சிறப்புப் பெயர்களையும், பட்டப் பெயர்க ளையும் வடமொழிப் பெயர்களாகவே சூட்டிக்கொண்டனர். இவர்கள் தங்கள் வெற்றிக்கும் புகழுக்கும் ஏற்பத் தம் பெயரால் பல ஊர்களைத் தோற்றுவித்ததோடன்றி நூற்றுக்கணக்கான பழைய ஊர்களுக்குத் தம் சிறப்பு மற்றும் பட்டப் பெயர்களைச் சூட்டினர். வடமொழி மறையவர்களுக்குப் பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயரால் பல ஊர்களைத் தோற்றியும் பழம்பெயர் மாற்றியும் வடமொழிப் பெயரிட்டுக் கொடையளித்தனர். இதனால் தமிழகத்துப் பெரும்பாலான ஊர்கள் தமிழ்ப்பெயரை இழந்தன.

எடுத்துக்காட்டாக, மேற்கு அடையாற்று நாடு – பச்சிமேச்சிரய நதி விசயமாகவும், பாம்பூர்–உரகபுரமாகவும், இளங்கோய்க்குடி – இராசராசச் சதுர்வேதிமங்கலமாகிப் பின் அம்பாசமுத்திரமாகவும், திருமுதுகுன்றம் –விருத்தாசலமாகவும், திருமறைக்காடு–வேதாரண்ய மாகவும், களக்காட்டூர்–வானவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலமாகிப் பின் மானாமதியாகவும்(செங்கை மாவட்டம்), திருவெண்காடு – மதுராந்தகமாகவும்(செங்கை மாவட்டம்), குன்றத்தூர் – சங்ககரி (சேலம்) சிங்கப்பெருமாள் கோயிலாகவும்(செங்கை), தகடூர் – தருமபுரியாகவும். குடமூக்கு – கும்பகோணமாகவும் ஆக்கப்பட்டது போல் நூற்றுக்கணக்கான ஊர்ப்பெயர்கள் மாற்றப்பட்டதை நமது ஆவணங்களில் காணலாம். அவற்றிற்கான பழந்தமிழ்ப் பெயர்களும் இவ்வாவணங்களிலேயே பொதிந்து கிடக்கின்றன.

ஊர்ப்பெயர்களைப் போன்றே மக்கட் பெயர்களும் வடமொழி யில் மொழிபெயர்க்கப்பட்டும், மொழிமாற்றப்பட்டும் தமிழ்நாட்டுத் தமிழர்களில் எண்பது விழுக்காட்டினர் தமிழர் என்பதற்கான பெய ரடையாளத்தை இழந்துவிட்டனர். கழகக் கால முதல் இடப்பட்ட பொதுவும் சிறப்புமான மக்கட் பெயர்களைப் பாட்டன், பூட்டன், தந்தை, மகன் என மாறிமாறிச் சூட்டிக் கொள்ளும் மரபு தமிழகத்தில் ஓங்கி நின்றது. மதங்களின் பரவலுக்கும், எழுச்சிக்கும் பின்னர்

கடவுட்பெயரையும், தொண்மப்(புராணம்)பெயரையும் சூடும் வழக்கு ஏற்பட்டது. மதங்கள் பேரெழுச்சி பெற்ற காலத்துங்கூட ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவன் குடிகொண்டதாகக் கருதப்படும் ஆறும், குளமும், மலையும், மரமுஞ் செடியுமான இயற்கைப் பொருட்களைச் சார்த்தி மயிலாடுதுறையாய், சாய்க் காட்டாய், திருவெண்காடா, குன்றமுடையாய், ஆலந்துறையாய் என இடப்பெயர்களாலும், செஞ் சடையாய், ஆடவல்லான், அப்பன், அத்தன் என தொழில் உறவுப் பெயர்களாலும் தமிழிலேயே அழைத்தனர். அவ்விறைத் தமிழ்ப் பெயர்களை மக்களும் பூண்டனர். ஆனால் கோயில்கள் வருவாய்க் களமாக மாறியபொழுது வடமொழியாளர் கூடமாக மாறி, தமது சொல்லாலும் செயலாலும் அவற்றை வடமொழியில் பெயர்த்து வழக்கில் கொணர்ந்தனர். மொழி பெயர்க்க ஒண்ணாதவற்றை வேறு வடமொழிப் பெயரால் அழைத்தனர். பகுத்துணராப் பத்தியால் மக்களும் அப்பெயர் சூடி வடமொழிப்பெயரினராயினர்.

எடுத்துக்காட்டாக தில்லைக் கூத்தனை எந்த ஒரு இலக்கியமோ கல்வெட்டோ நடராசன் என்று அழைக்கவில்லை. ஆனால் ஆயிரம் நூல்களும் பல்லாயிரம் வாய்களும் நடராசா என்றழைக்க வைத்த பெருமை வடமொழிப் பற்றாளர்களையே சாரும். மன்றுளாடும் பெருமான் சபாபதி ஆக்கப்பட்டார். ஐயாறப்பன் பஞ்சநதீசுவர ராக்கப்பட்டார். திருவரங்கத்தெம்பெருமாள், சிரீரங்கநாதராக்கப் பட்டார். இதனால் இறைவன் பெயரைப் பூணும் நோக்கால் பல்லாயிரவர் வடமொழிப் பெயர் பூண்டனர்.

இடப்பெயர், ஆட்பெயருக்கு ஏற்பட்ட இதே அழிநிலை தமிழர் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தமிழ்ச் சொல்வளம், தமிழ், தமிழர்களின் கலை, பண்பாட்டுத் தொழில் நுட்பத்துறைகளிலும் ஏற்பட்டுள்ளதைத் தமிழ் ஆவணங்கள் காட்டுகின்றன. நமது கொடுத்துக் கொளல், விற்று வாங்கலைக் குறிக்கும் ஆவணங்கள், இன்று தமிழ்ச் சொற்களைத் தேடிக்காணும் நிலை ஏற்பட்டுள்ளது. நம் தமிழ் ஆவணங்களில் ஒரு சொல்கூட பிறமொழிச் சொல் கலவாது எழுதும் சொல் வளத்தைக் கொண்டுள்ளது. எடுத்துக் காட்டாக நமது ஓலை பத்திரமாகவும், டாகுமெண்டாகவும், அறை யோலை–பிரகடனம், ப்ரக்ளமேசனாகவும், ஆவணம்– தசுதாவேசாக வும், இசைவு, இசைவுத்தீட்டு – சம்மதம், அக்ரிமெண்டாகவும், பிடிபாடு – ஆதாரமாகவும், கீழீடு – எண்டார்சுமெண்டாகவும், விலையாவணம் – கிரயப்பத்திரம், சேல்டீடாகவும், அடையோலை – லீசாகவும், புணை – சூரிட்டியாகவும், தீட்டு –டிராப்ட்டாகவும், நடுவர் நடுவிருக்கை – மத்தியசுத்தனாகவும், அறிவோர்– சாட்சிக ளாகவும், தலைமாறு – பரிவர்த்தினை, எக்சேஞ்சாகவும், வன்பற்று

– சப்தியாகவும் ஆகியுள்ளது போன்று பன்னூறு தமிழ்ச் சொற்கள் மொழிமாற்றப்பட்டுள்ளன. அதனால் தமிழுக்குச் சொல்பற்றாக்குறை கற்பிக்கப்பட்டது.

கட்டடக் கலைத்துறையில் தமிழ்நாட்டுக் கலைக்கென ஒரு தனி இடம் உண்டு. நெடிய வரலாற்றைத் தாங்கித் தலைநிமிர்ந்து நிற்கும் நமது கோயில்களே இதற்குச் சான்று. இடைக்காலத்தில் கோயிலும் இறையும் வடமொழிப்படுத்தப்பட்டது போலவே கோயிற் கட்டடப் பகுதிகளும், கட்டடக் கலைச்சொற்களும், வழிப்பாட்டு கலைச் சொற்களும் வடமொழியாயின. கோயில் ஆலயமாயிற்று. இலக்கியத் திலோ, கல்வெட்டிலோ எங்கும் காணப்படாத கர்ப்பகிருகம் என்ற சொல் காலங்கள்தோறும் தமிழகமெங்கும் வழங்கிய உண்ணாழிகை, அகநாழிகை என்ற சொற்களை ஏப்பம் விட்டுவிட்டது. இறைவனைச் சுற்றிவரும் திருச்சுற்று பிரகாரம்மாகவும், திருச்சுற்றுக் கோயில்கள் – பரிவாராலயமாகவும் மாறின. நீரைத்தெளித்துக் கோயிலைத் தூய்மைப்படுத்திய நீர்த்தெளிவிழா கும்பாபிசேகமாயிற்று. நமது கோயில்கள் காலவெள்ளத்தால் அழிவுற்றபொழுது திருத்திக் காட்டிய அழிவுதிருத்தல் சிரனோத்தாரனமாயிற்று. இன்னும் கோயில் கட்டு மான பூசை, விழா, கொட்டு, ஆட்டு, பாட்டு அனைத்திலும் வடமொழி வாடை தமிழ் மனத்தை அமுக்கிவிட்டது. இதன் பயனாய் நமக்கென்றே உள்ள தமிழ்க் கட்டடக் கலை பற்றிக் கூறும் நூல்கள் அழிந்தோ அல்லது அழிக்கப்பட்டோ போய்விடக் காசிய சில்பசாத்திரம், மய மதம் போன்ற வடமொழி நூல்கள் நமது கட்டடக் கலை நூல்க ளாயின. நமது கட்டடக் கலை வல்லுநர்கள் கேவாதபெருந்தச்சன், இராசராசப் பெருந்தச்சன் என சிறப்பிக்கப்பட்டனர். பெருந்தச்சர் என்ற பெருமை போய் இன்று சுதபதி (ஸதபதி) என்றால்தான் பெருமை என்றாகிவிட்டது. அழிந்து வரும் நமது கலைகளையும், மறைந்து போன கட்டடக் கலைச் சொற்களையும் புதுக்கி பொலிவு பெறச் செய்ய ஆவணத் தமிழே நமக்குள்ள பெருஞ்செல்வம்.

இதே போன்று தமிழர் வாழ்வின் ஆட்சியல், வாழ்வியல் அனைத்திற்கும் தேவையான தமிழ்ச் சொல்வளம் நம் ஆவணங்க ளில் குவிந்து கிடக்கின்றன. மறைந்து கிடக்கும் அருமணிகளைத் தேடிக்கழுவிச் சொன்மாலையாக்கித் செந்தமிழைச் செங்கோ லோச்சச் செய்வது நமது தலையாய கடமை. என்றுமுள தென் தமிழை ஆவணத்தமிழ் மீண்டும் அரியணை ஏற்றும். அருந்தமிழின் வேர்ச்சொல்வழி இன்றைய அறிவியலுக்குத் தேவையான தமிழ்ச் சொற்களை வளர்த்தெடுத்தல் நமது கடன். எனவே, ஆவணத்தமிழ் மணிகளைத் தெள்ளி அறிவியல் தமிழ்மணிகளைக் கல்லி அன்னைத் தமிழை அரியணை ஏற்றுதல் நம் கடன்! ■

# எங்கள் ஒருவரை என்று காண்போம்?

— பாவலர் இளஞ்சித்திரன்—

கொள்கையில் மாறா நெஞ்சம்!
கூன்படா எழுத்து வேகம்!
கள்ளமில் எடுத்த தோற்றம்!
கண்களில் ஆய்வுப் பார்வை!
வெள்ளமென் றிருக்கும் அன்பு
விரும்பிய தமிழர் தம்பால்!
அள்ளிய சாலை யாரா?
அடடா, ஓ! ம றைந்தார்!

பகையினை மொத்தும் வீரம்!
பழிப்பிலாத் தொண்டில் தும்பை!
தொகையுற அவர்செய் பாட்டில்
தோன்றிடும் தமிழ வேழம்!
வகையுறப் பாடும் சாலை—
வள்ளலை இழந்திட் டோமா?
தகைபெற வாழ்ந்த ஏந்தல்!
தமிழ்க்கினி துணையார் இங்கே?

பணத்தினை, பதவி தன்னை,
பகட்டினைத் தூ! என் றெண்ணும்
குணத்தினைக் கொண்ட எங்கள்
கொள்கைவேள் சாலை யாரா
மணத்தினை விட்ட பூப்போல்
வாடிய படியில் ஆனார்?
உணர்வினுக் குரத்தை, எங்கள்
ஒருவரை என்று காண்போம்?

வாயெனத் தமிழர் தம்கை
வாளெனச் சுழன்றி ருந்தார்!
தாயெனப் பரிவு காட்டித்
தமிழரைக் காக்க நின்றார்!
நாயென எவர்முன் னாலும்
நத்துதல் செய்யா ஆண்மை!
தீயென இருந்த சாலைச்
செம்மலை என்று காண்போம்?

தமிழரை உயர்த்த வல்ல
    தகுதமிழ் மானம் கொண்டார்!
திமிர்ந்தநல் அறிஞர்! சான்றோர்!
    செந்தமிழ் இளந்தி ரையர்!
நமிலெவர் இவர்போல்? ஐயோ!
    நம்மைவிட் டெங்கே சென்றார்?
தமியராய் நிற்கின் றோமே!
    தாங்குதற் கில்லை அம்மா!

(வேறு)

ஒருவன்நீ இருப்ப தெண்ணி
    ஊக்கமாய் இருந்தோ மே!எம்
திருவினை மீட்கும் கொள்கைத்
    தேவைக் கிருந்தா யே!உன்
அருமையை இழந்திட் டோமே!
    அடடா! என்ன செய்வோம்?
பெருமதிப் பெடுத்த ஐயா,
    பிரிந்தெமைச் சென்ற தெங்கே?

**தென்மொழி நன்கொடை வரவுகள்**
**(1.7.98 முதல் 31.10.98 முடிய)**

1. அக.பா. மதிச்செல்வன் — பழையவண்ணை — 50.00
(பாவலரேறு ஐயா அவர்களின் 3-ஆம் ஆண்டு நினைவின் நன்கொடை)
2. இரா. பதுமநாபன் — மதுரவாயல் — 25.00
3. இரா. கவின்பணிஞன் — புதுக்கோட்டை — 10.00
4. ஆ. சிவானந்தம் — சென்னை 83 — 500.00
5. த. அன்பழகன் — ஆலங்குளம் — 40.00
6. இரா. பதுமநாபன் — மதுரவாயல் — 25.00
7. கு. சோதிப்பிரகாசம் — இராசகுத்தான் — 40.00
8. கவின்பணிஞன் — புதுக்கோட்டை — 20.00
9. இரா. பதுமநாபன் — மதுரவாயல் — 25.00
10. வ. வேம்பையன் — மறைமலைநகர் — 20.00
11. அரிமா வளங்கோ — பிரான்சு — 10,000.00
12. சீனி. செந்தேவன் — பல்லடம் 100.00
(மகனுக்கு ‘விடுதலைச் செம்மல்’ என்று பெயர் சூட்டியதன் நினைவாக நன்கொடை.)

# செய்திகள்

**கொலைகாரி சந்திரிகா கொடும்பாவை எரிப்புப் போராட்டம்!**

யாழ்ப்பாணம் செம்மணியில் நானூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்று புதைத்து மறைத்த இலங்கைச் சந்திரிகா அரசைக் கண்டித்துக் கொலைகாரி சந்திரிகாவின் கொடும்பாவை எரிப்புப் போராட்டம் தமிழீழ ஆதரவாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கடந்த கன்னி 21 அன்று (7.10.98) நடைபெற்றது.

சென்னையில் இலங்கைத் துணைத் தூதரகத்தின் முன் கொலைகாரி சந்திரிகாவின் கொடும்பாவையை எரிப்பதற்காக அற்றைக்(7.10.98) காலை 10.30 மணிக்கு வள்ளுவர் கோட்டம் அருகிலிருந்து மேனாள் அமைச்சர் ஆனூர் செகதீசன் தலைமையில் பேரணி புறப்பட்டது. புறப்படுவதற்கு முன்னரே அங்குத் திரளாகக் குழுமியிருந்த காவல்துறையினர் கொடும்பாவையைப் பிடிங்கிக் கொண்டனர்.

பேரணியைத் தடுத்து நிறுத்திப் போராட்ட வீரர்களைத் தளைப்படுத்திக் கொண்டு சென்று வேப்பேரிக் காவல் நிலையத்திலும் பின்னர் அங்கே ஒரு மண்டபத்திலும் சிறைப்படுத்தி வைத்தனர்.

சிறைக்கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் ஆனூர் செகதீசன், தியாகு, புலவர் இறைக்குருவனார், தேனிசைச் செல்லப்பா, திருமறவன், புலவர் கி.த. பச்சையப்பன், தேன்மொழி, அ. பதுமநாபன், தென்னரசு ஆகியோர் உரையாற்றினர். முன்ன தாகத் தேனிசைச் செல்லப்பா, உண்மைவிரும்பி, தாவீது ஆகியோர் பாடல் இசைத்தனர்.

தளைப்பட்டோர் அனைவரும் அன்று மாலை 6 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

**'தமிழ்த்தேவி மூலிகை எரிபொருள்' வெள்ளோட்டம்**

திரு. இராமரின் கண்டுபிடிப்பான 'தமிழ்த் தேவி மூலிகை எரிபொருள்' என்னும் முறிநெய் வெள்ளோட்ட நிகழ்ச்சி, கடந்த துலை 18 அன்று(4.11.98) முற்பகல் சென்னை – ஆழ்வார் திருநகரிலுள்ள குகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இராமர் வரவேற்று பேசினார்.

தென்மொழி அவைய ஒருங்கிணைப்பாளர் புலவர் இறைக்குருவனார், தமிழக அறிவியல் கழக அமைப்பாளர் திரு. மா. பூங்குன்றன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகச் சுதேசி விழிப்புணர்வு இயக்கத் தலைவர் குருமூர்த்தி, மருத்துவர் சமுனா சீனிவாசன், திரைப்பட இயக்குநர்

வெ. சேகர், சைதை துரைசாமி ஆகியோரும் தொடர்ந்து மருத்துவர் சாமிசண்முகம், திரு. இராசலெட்சுமி ஆகியோரும் வாழ்த்திப் பேசினர்.

அறிவியலாளர்களான முனைவர் சீதாராமன், முனைவர் இமுராம்சா ஆகியோரும் 'கல்கண்டு' ஆசிரியர் இலேனா தமிழ்வாணனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மேடையில் அனைவர் முன்னிலையிலும் மூலிகை எரிபொருள் உருவாக்கம் செய்து காட்டப்பட்டது. வரும் மார்ச்சு 10 முதல் இவ் வெரிபொருள் நாளொன்றுக்கு 500 படி(லிட்டர்) உருவாக்கப்படும் என்றும் படி 15 உருவா மேனி விற்பனைக்குக் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**ஏ. எலினா சாக்குலையன் — ச. தேவசகாயநாதன் வாழ்க!**

தி.பி. உ0உகூ கன்னி 25(11.10.98) அன்று ஏசு புட்பராணி இணையர் மகள் ஏ. எலினா சாக்குலையனுக்கும், சபாசுடியன் பிலோமினா இணையர் மகன் ச. தேவசகாயநாதனுக்கும் அரக்கோணம் நாராயணசாமி திருமணக்கூடத்தில் வே. ஆனைமுத்து அவர்களின் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பாவலர் தமிழேந்தி வரவேற்புரையாற்ற, சொல்லாய்வறிஞர் அருளியார், வேலூர் குமார் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

## அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் தமிழகம் திரும்பினார்.

கடந்த மூன்றுமாதங்கட்கு முன்னர் அமெரிக்கா சென்ற அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள், அங்கிருந்து புறப்பட்டுக் கடந்த துலை 22 அன்று (8.11.'98) இரவு 9 மணிய ளவில் நலமுறச் சென்னை - மீனம்பாக்கம் வந்து சேர்ந்தார்.

அம்மா அவர்களைக், கடந்த துலை 20 அன்று (6.11.'98) இரவு, அமெரிக்காவிலுள்ள இலாசு ஏஞ்சல்சு வானூர்தி நிலையத்தில், பாவலரேறு ஐயா — அம்மா அவர்களின் மருகர் ஆறிறைவன், மகள் செந்தாழை, பேரப்பிள்ளைகள் செந்தணல், யாழிசை ஆகியோர் அம்மா அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

மூன்றுமாத அமெரிக்கச் செலவை முடித்துக் கொண்டு தாயகம் மீண்ட அம்மா அவர்களை மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தில் தென்மொழிக் குடும்பத்தினரும் அன்பர்களும் வரவேற்றனர்.

# சாதி இல்லை; மதம் இல்லை என்று எழுதித்தர உரிமை

## தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைக் கடிதம்

**ந.க. எண். 266873/74/இ2 நாள் : 9.2.75ன் நகல்:**

பொருள்: கல்வி — இடைநிலை — மாற்றல் சான்றில் சாதிப் பெயர் குறிப்பிடாமல் இருக்க விரும்பினால் அவ்வாறு செய்யும் உரிமை அளித்தல் பற்றியது.

பார்வை: 1. இயக்குநரின் செயல்முறைகள் நி.மு.எண். 145600/இ3/71 நாள்: 31.7.1973 உடன் அனுப்பப்பட்ட அரசாணை (நிலை) எண். நாள். 12.10 கல்வி நாள்: 2.7.1973.

2. செய்யாறு மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க. 4டி/75 நாள் : 3.1.75.

குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்க விரும்பிய பெற்றோர்கள் சிலர், சேர்க்கைப் படிவங்களில் சாதிப் பெயர்களைக் குறிப்பிடாமல் குழந்தைகளுக்கு 'சாதிப்பெயர் இல்லை' என்று குறிப்பிட விரும்புவதான சில முறையீடுகள் பள்ளித் தலைமையாசிரியர்வழி, இயக்குநரின் கவனத்திற்கு வந்துள்ளன. இது குறித்து ஆய்வு அலுவலர்களின் கவனம் பார்வைக்குக் கண்டுள்ள அரசாணைக்கு மறுமுறையும் ஈர்க்கப்படுகிறது. இடைநிலைப் பள்ளிச் சான்றிதழ் மற்றும் மாற்றல் சான்றிதழ் ஆகியவற்றில் **'சாதி இல்லை', 'சமயம் இல்லை'** என்று குறிப்பிடவோ, அந்த இரு பத்திகளுக்கும் எதிராக இடத்தை வெறுமையாகவிடவோ எவரும் விரும்பினால் அவ்வாறே செய்யும் உரிமையை அவருக்கு அளிக்கலாம் என உள்ளது. மாற்றல் சான்றிதழில் சாதிப்பெயர் குறிப்பிடாமல் இருக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளபொழுது சேர்க்கைப் படிவத்திலும் சாதிப்பெயர் குறிக்குமாறு எவரையும் வற்புறுத்தக் கூடாதென்று எல்லாத் தலைமையாசிரியர்களுக்கும் உடனே அறிவுரை வழங்குமாறு ஆய்வு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஒ-ம்) இரா. பெருமாள்,
பள்ளிக் கல்வி இயக்குநர்.